www.padippakam.com

# பின் நவீனத்துவம் எதிர் நவீனத்துவம் தலித்தியம்



**E.M. சியோரான்**

அ. மார்க்ஸ், ரவிக்குமார், அழகரசன், அ. ராமசாமி
தமிழவன், நாகார்ஜுனன், காவ்யா சண்முகசுந்தரம்

நிறப்பிரிகை வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பின் நவீனத்துவம் எதிர் நவீனத்துவம் தலித்தியம்

E.M. சியோரான்,
அ. மார்க்ஸ், ரவிக்குமார்,
அழகரசன், அ. ராமசாமி, தமிழவன்,
நாகார்ஜுனன், காவ்யா சண்முகசுந்தரம்

நிறப்பிரிகை வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

பின் நவீனத்துவம்
எதிர் நவீனத்துவம்
தலித்தியம்

முதல் பதிப்பு : ஜனவரி 1995

விலை : ரூபாய் ஐந்து

விற்பனை உரிமை: நிறப்பிரிகை
அ.பெ. எண் 192,
பாண்டிச்சேரி- 605 001.

விற்பனை உரிமை: விடியல் பதிப்பகம்,
3-மாரியம்மன் கோயில் தெரு
உப்பிலிப்பாளையம்
கோயமுத்தூர் 641 015.

அச்சாக்கம் : ஔவை அச்சகம்
திருச்சிற்றம்பலம் 605 101

அட்டையிலுள்ள
புகைப்படம் : VERSO, Catalogue 1994 ல்
எடுக்கப்பட்டது

□ □ □

படிப்பகம்

www.padippakam.com

# 'முதல் முதல்' தமிழவனும் கோயமுத்தூர் பார்த்தசாரதியும்

அ. மார்க்ஸ்

''எல்லாவற்றையும் சந்தேகி'' என்பார் மார்க்ஸ். பிரதிகள்
விசயத்தில் இது ரொம்பப் பொருந்தும். இன்னின்ன அர்த்தங்களையும்
நோக்கங்களையும் கொண்டுள்ளனவாக அவற்றின் ஆசிரியர்களாலும்
தொடர்புடைய நிறுவனங்களாலும் முன்னிறுத்தப்படும் பிரதிகளின் அறி
விக்கப்பட்ட நோக்கங்களையும் அப்பாவித் தனங்களையும் சந்தேகிக்கும்
பண்பை வாசிப்பவர்களாகிய நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய அவசி
யத்தை தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றோம். ஆனால் அச்சிட்டபொருள்
எதுவானாலும் — அது பக்கோடா மடிக்கப் பயன்பட்ட காகிதமானாலுங்
கூட—அதை வணங்கும் மரபுடைய நமது நாட்டில் பிரதியைச் சந்தேகிக்
கும் பார்வை வளர்வதற்குச் சாத்தியமில்லாத சூழலிருப்பது வருந்தற்
குரிய ஒன்று. இந்த அம்சத்தின் மீது கவனத்தை ஈர்க்கும் விதமாக ரவிக்
குமார் எழுதிய கட்டுரை ஒன்று (எழுத்து-வாசிப்பு-தமிழ்ச்சூழல்) வாசிப்பு
குறித்த முக்கியமான கருத்தொன்று வெட்டப்பட்டு சில வாரங்கள் முன்பு
'தினமணி சுடரி'ல் வெளியாகியது. மொழிபெயர்ப்பு எழுத்துக்களைச்
சொந்த எழுத்துகள் போல முன்னிறுத்தும் ஒரு போக்கு தமிழ்ச் சூழலில்
சமீபத்தில் தோன்றியுள்ளதையும் அதனைத் தமிழ் வாசகர்கள் கண்டு
கொள்ளாததையும் அக்கட்டுரை சுட்டிக் காட்டியது. மொழி பெயர்ப்பைச்
சொந்த எழுத்தாக முன்னிறுத்துபவர்களாக ஒரு நான்கைந்து தமிழ்
எழுத்தாளர்களை அக் கட்டுரை குறிப்பிட்டாலும் அவர்களில் இருவர் மிக
வும் ஆத்திரத்தோடும் பதட்டத்தோடும் அக் கட்டுரையை எதிர் கொண்ட
னர். மூன்றாவதாக ஒருவர் (தமிழவன் குழுவினரின் இரண்டாம் பெரிய
வாள் அவர்) ரவிக்குமாரின் கட்டுரையை அச்சில் ஏற்றியதே பாவம் எனச்
சாடினார். இவற்றையும் 'சுடர்' பிரசுரித்தது. இந்த பதில்கள் தங்களின்
நியாயங்களை முன் வைப்பதாக மட்டுமில்லாமல் சிலதகவல் பிழைகளையும்
தகவல் மறைப்புகளையும் கொண்டிருந்ததோடன்றி, ஒரு புதிய சிந்தனை
முறையையும் எழுத்து முறையையும் தமிழுக்கு அறிமுகப் படுத்தியது பற்
றிய வழக்கமான சுயப் பிரதாப ஆர்பாட்டங்களையும் உள்ளடக்கி இருந்
தன. இதனை மறுத்து ரவிக்குமார், அ. ராமசாமி ஆகியோர் எழுதிய
கடிதங்களை தினமணி வெளியிட மறுத்ததன் விளைவாக எல்லாவற்றை
யும்தொகுத்து வெளியிட வேண்டிய அவசியம் இப்போது எங்களுக்கு
நேர்ந்துள்ளது.

சம்பாதிப்பது, குடும்பம் நடத்துவது, கட்டுரைகள் கதைகள் எழுது
வது தவிர வேறு என்ன முக்கியமான பணியைத் தமிழவன், நாகாராஜ
னன் மற்றும் சிவசு, சண்முகம் போன்ற அதர்களது வழித் தோன்றல்கள்
செய்து வந்துள்ளனர் என்று கவனித்துப் பார்த்தால் ஒரு உண்மை விளங்
கும். அது அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம், மேஜிக்
ரியலிசம், பாலிம்செஸ்ட் எழுத்துமுறை, தலித் இலக்கியம் போன்ற நவீ
னமான சிந்தனை மற்றும் எழுத்து முறைகளைத் தமிழுக்கு அறிமுகப்
படுத்தித் தமிழைப் பரிபாலித்தவர்கள் தாங்கள்தான் எனபதை நிறுவுவ
தற்கான முயற்சிதான் அவர்களின் அந்த முக்கியமான பணி. வழித்
தோன்றல்களை விட்டு தாம் நடத்துகிற பத்திரிகைகளில் கட்டுரைகளை
யும், தாம் எழுதுகிற நூல்களுக்கு முன்னுரைகளையும் எழுதச் சொல்லு
தல், இவர்களுக்கென இவர்களே தயாரித்து வைத்துள்ள கிரீடங்களை
எடுத்துச் சூட்ட மறுப்பவர்களைக் கன்னா பின்னாவென்று திட்டுதல் முத
லியவை இதற்கென இவர்கள் மேற்கொண்டுள்ள செயற்பாடுகள். சமீபத்
தில் இதற்கெனவே—அதாவது சுயபுராணம் பாடுவதற்கும், கிரீடம் சூட்
டிக் கொள்ளவும் — ஒரு சிற்றிதழையும் (வித்யாசம்)

தொடங்கியுள்ளனர். இவர்கள் தயாரித்து வைத்துள்ள கிரீடங்களுக்கு இவர்கள் தகுதியானவர்கள்தானா என அறிய நாம் சில விசயங்களை யோசித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

நாட்டுப்புற ஆய்வுகளில் சுமார் பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே அமைப்பியலாய்வு முறை பயன்படுத்தப்பட்டு வந்த போதிலும் அமைப்பியல் குறித்த ஒரு நூலை 'முதன் முதலில்'' எழுதியவர் தமிழவன் (1982) தான் தொடர்புடைய சில ஆங்கில நூற்பகுதிகளின் கிட்டத்தட்ட சுருக்கப்பட்ட மோசமான மொழி பெயர்ப்பாக இருந்த அந்நூலைப் படித்து அமைப்பியலை அறிந்து கொள்வது சாத்தியமே இல்லை என்பதை ந்நூலைப் படித்தவர்கள் அறிவர்.

அடுத்த ஏழெட்டாண்டுகளுக்கு தமிழ்ச்சூழலில் அமைப்பியல் எந்த பெரிய தாக்கத்தையும் ஏற்படுத்தி விட வில்லை. படைப்பு உன்னதம், படைப்பாளியின் உள்ளொளி, தரிசனம், லஹரி, அழகியலடிப்டையிலான விமர்சன முறைக்கு மாற்று விமர்சன முறையாக இக் கால கட்டங்களில் எவ்வளவு குறைபாடுடையதெனினும் மார்க்சியமே செயல்பட்டு வந்தது.

1980களின் இறுதியில் உலகெங்கிலும் மார்க்சியமாக அறியப் பட்டிருந்த அரசியல், தத்துவ, விமர்சன நடைமுறைகளுக்கு ஏற்பட்ட நெருக்கடிகளின் விளைவாக, மைய நீரோட்டத்திற்கு எதிரான புதிய எதிர்ப்பு எழுத்து வடிவங்களையும் விமர்சன முறைகளையும் தேட வேண்டிய அவசியம் ஏற்பட்ட போது அமைப்பியல், மார்க்சிய அமைப்பியல், புதிய விமர்சன முறை குறித்த கரிசனங்கள் தமிழ்ச் சூழலில் முன்னுக்கு வந்தன. இந்த வரலாற்றுரீதியான பின்னணியை விளங்கிக் கொள்ளாமல் எங்கோ ஒரு மூலையில் ஒரு பல்கலைக் கழக அறையில் உட்கார்ந்து கொண்டு ஒரு புத்தகத்தை எழுதித் தமிழைப் புனருத்தாரணம் செய்து விட்டதாகவும் தமிழில் புதிய போக்குகளையே உருவாக்கி விட்டதாகவும் பற்றிக் கொள்ளும் ஆபாசத்தைத் தோழர்கள் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும்.

'சுபமங்களா'வில் கரிகாலனின் கவிதை நூலின் முன்னுரை தொடர்பாக நடைபெறும் விவாதத்தைப் பின்பற்றிக் கொண்டிருப்பவர்கள் ஒன்றைக் கவனித்திருக்க முடியும். அமைப்பியலுக்குள் பல போக்குகள் உள்ளன. ஒரு பிரதியை எப்படி வேண்டுமானாலும் வாசிக்கலாம் என்கிற போது அதனை இடதுசாரி அணுகல் முறையிலும் வாசிக்கலாம் வலது நோக்கிலும் அணுகலாம். தமிழவனும் நாகார்ஜுனனும் அவரது வழித்தோன்றல்களும மேற்கொள்ளும் வாசிப்புகளின் அரசியல் எத்தன்மையானது என்பது முக்கியம். அப்பட்டமான வலதுசாரி வாசிப்பையும் கட்டவிழ்ப்பையும் மேற் கொள்வதே இவர்களின் பணியாக இருந்துள்ளது; இருந்து வருகிறது. இந்திய சூழலில் வலதுசாரி வாசிப்பு என்பது வருணாசிரம/பார்ப்பனீய வாசிப்புதான் என்பதை விளக்க வேண்டியதில்லை இந்தத் தொகுப்பிலுள்ள போத்ரியா பற்றிய கட்டுரையும் அழகரசனின் கடிதமும் இதனை நுண்மையாக உணர்த்தி விடுகின்றன. க.நா.சு., ஞானக்கூத்தன் போன்ற அப்பட்டமான பார்ப்பனீய மரபுவாதிகளை நவீனத்துவ மற்றும் பின் நவீனத்துவப் பிதாமகர்களாக முன் வைத்து இவர்கள் அமைப்பியல் உடுக்கை அடிப்பதையும், பெரியாரையும் திராவிட இயக்கத்தையும் இவர்கள் தொடர்ந்து காய்ந்து வருவதையும நாம் மிகக் கவனமாகப் பார்க்க வேண்டும்.

'வித்யாசம்' இதழைப் பாருங்கள். முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை இவர்கள் திராவிட இயக்கத்தின் மீது காழ்ப்பைக் கக்கியிருப்பது புரியும் ஞானக்கூத்தனைப் பின் நவீனத்துவப் பிதாமகராகச் சொல்லும் இவர்கள் அண்ணாவை ஒரு எழுத்தாளராகச் சொல்வதையே பாவம் என்கிறார்கள்! திராவிட இயக்கத்தின் இன்றைய சீரழிவைக் காரணம் காட்டி அது தோன்றியதன் வரலாற்று நியாயத்தை நாம்

புறக்கணித்து விட இயலாது. வருணாசிரம இந்தியாவில் வாழ நேர்ந்து விட்ட நம்முடைய பணி இந்தச் சீரழிவுகளை ஒதுக்கி, இவற்றிற்கான காரணங்களைக் கண்டு களைந்து ஒரு புதிய பெரியாரியத்தைக் கட்டமைப்பதாகத்தான் இருக்க முடியும். பெரியாரியம் என்பது ஒரு வரட்டுத் தனமான பார்ப்பன எதிர்ப்பாக மட்டுமே அதன் எதிரிகளால் மட்டுமல்ல அதன் வழித் தோன்றல்களாலும் கட்டமைக்கப் பட்டுள்ளது. இந்தக் கட்டமைப்பைச் சிதைத்து பெரியாரியத்தின் எதிர் கலாச்சாரக் கூறுகளைக் கண்டறிவதே இந்தியச் சூழலில் நவீனத்துவ நடைமுறையாக இருக்க முடியும்.

இந்த நோக்கில் பார்க்கும் போதுதான் இவர்கள் பின் நவீனத்துவம் என்கிற பெயரில் எதிர் நவீனத்துவம் அதாவது பழமை வாதம் அதாவது பார்ப்பனீயத்தைத்தான் பேசுகின்றனர் என்பது புரியும். இந்தத் தொகுப்பிலுள்ள கட்டுரைகளும் கடிதங்களும் இதனைத் தொட்டுக் காட்டுகின்றன. உண்மையான தலித்தியம் என்பது பார்ப்பனிய எதிர்ப்பல்ல, பிற்படுத்தப் பட்டவர்களின் ஆதிக்கத்தை எதிர்ப்பதுதான் என இவர்கள் சொல்லும்போது (வித்யாசம்-2) இவர்களின் உண்மை சொரூபம் வெளிப் பட்டு விடுகிறது.

திராவிட இயக்கத்தைத் தவிர வேறெதனை எதிர்ப்பு இலக்காக வித்யாசம் சுட்டிக் காட்டுகிறது? ஆபாசம், வணிகமயமாதல், கல்கி, சுஜாதா... இப்படி வணிகமயமாதலையும் திராவிட இயக்கத்தையும் எதிர்ப்பது என்கிற வகையில் இவர்கள் மணிக்கொடியின் சரியான வாரிசுகள்தான். எனவேதான் இவர்கள் மணிக்கொடி வழியிலான சிறு பத்திரிகைப் பாரம்பரியத்தை உயர்த்திப் பிடிக்கின்றனர். சிறுபத்திரிகைXபெரும் பத்திரிகை என்கிற எதிர்வை முன் வைத்து, சிறுபத்திரிகைக்கு ஒரு பீடம் கட்டி அதன் மூலம் தங்களின் மேன்மையையும் அதிகாரத்தையும் நிலை நாட்டுவதே இவர்களின் நோக்கமும் பணியும். ஆனால் இங்கே சிறுபத்திரிகைகளுக்கும் பெரும் பத்திரிகைகளுக்கும் கருத்தியலடிப்படையில் பெரிய வேறுபாடுகள் இல்லை என்கிற உண்மையை வெளிப்படுத்தி இவர்கள் கட்டி வைத்த பீடங்களை நாம் தகர்த்தெறியும்போது இவர்களின் ஆத்திரம் ''வித்யாசமாக'' வெளிப் படுகிறது.

ஒன்றை யோசித்துப் பாருங்கள்: திராவிட இயக்கத்தையும், ஆபாசம்/வணிகமயமாதலையும் எதிர்ப்பதுதான் தமிழ்ச் சூழலில் பின் நவீனத்துவம் என்றால் துக்ளக் ''சோ'' வையும் கூடத்தான் பின் நவீனத்துவப் பிதாமகர் பட்டியலில் சேர்த்து விடலாம். வித்யாசத்திற்கும் துக்ளக்கிற்கும் என்ன வித்யாசம்? சொல்லப் போனால் இவர்களைவிட 'காப்பிரைட்' உரிமை கோரி ஆர்பாட்டம் செய்யாத வகையில் சோ வை இவர்களை விடத் தாராள வாதி எனலாமே? சோ-நாகார்ஜுனன் ஒப்பீட்டை மிகை எளிமை படுத்தப்பட்ட ஒன்றாகக் கருத வேண்டாம். ஆழ்ந்த பொருளோடும் நியாயங்களோடும் தான் இந்த ஒப்பீடு செய்யப்படுகிறது. தோழர்கள் யோசிக்க வேண்டும்.

கடைசியாக ஒன்று: சுரேஷ்குமார் இந்திரஜித், லண்டனிலிருந்து ''உயிர்ப்பு'' இதழ் நடத்தும் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆகியோர்கள் மீது ஆத்திரத்தைக் கக்கியுள்ளது வித்யாசம் (2). தமிழவன் மற்றும் நாகார்ஜுனனின் காப்பிரைட் விசயத்தில் கைவைத்து விட்டார்களாம் இவர்கள். இவர்கள் ஏதோ ஒரிஜினலாக எல்லாவற்றையும் எழுதி வருவது போலவும் அவற்றை மற்றவர்கள் காப்பியடித்து விட்டதாகவும்.... எத்தனை பெரிய வேடிக்கை! ''முதல் முதல்'' பேர்வழிகளின் பெயர்களை மற்றவர்கள் குறிப்பிட்டிருக்கலாம் என்றே வைத்துக் கொண்டாலுங்கூட இவர்கள் படித்த ஆங்கிலப் புத்தகங்களை நேரடியாக அவர்களும் படித்திருக்கக் கூடாதா? 'உயிர்ப்பு' தோழர்கள் இவர்களைப் போல ''அறிவு ஜீவிகள்'' அல்ல. அதிகம் படித்திராதவர்கள். தேசிய இனப் பிரச்சினையை முன்னெடுக்க விரும்பும் போராளிகள். தமிழவனின்

புத்தகத்தைப் படித்தே அவர்கள் அக் கட்டுரையை எழுதியிருந்த போதிலும் தமிழவன் அதற்காக மகிழ்ச்சியடைவதுதானே சரியாக இருக்க முடியும்! அதைவிட நாம் எழுதுவதற்கெல்லாம் வேறென்ன பயன் விளைந்து விடப் போகிறது?

மார்க்சியம், எக்சிஸ்டான்சியலிசம், அமைப்பியல், நுண் அரசியல் போன்றவையெல்லாம் பரவலான சிந்தனை மற்றும் விமர்சன நடைமுறையாகத் தமிழ்ச் சூழலில் ஒரு தாக்கத்தை விளைவித்தன என்றால் அதனை வெறும் சிறு பத்திரிகையினரின் சாதனையாகப் பார்க்க இயலாது. பரவலான வீச்சுடன் இவற்றை நடைமுறைப் படுத்தியவர்கள் சிறு பத்திரிகை நடவடிக்கைகளுக்கும் அப்பாற்பட்டு எதிர்ப்பு அரசியல் களத்தில் இயங்கியவர்கள். நா. வானமாமலையையோ, கோ. கேசவனையோ, எஸ்.வி இராசதுரையையோ வெறுமனே சிறு பத்திரிகைச் சிமிழுக்குள் அடக்கிவிட இயலாது.

தமிழவன், நாகார்ஜுனன் குழுவினரை நோக்கி நாம் சொல்ல விரும்புவது இதுதான்.

''சற்றே பதட்டம் தணிக!''

''புதிய செய்திகள் இல்லை'' எனக் காரணம் சொல்லி ரவிக்குமாரின் கடிதத்தைப் பிரசுரிக்க மறுத்து விட்டார் மாலன். இந்த முன்னுரையை எழுதுவதற்காக மறுபடியும் எல்லாவற்றையும் தொகுத்துப் படிக்கும் போது மாலனின் கூற்றில் நியாயமிருக்கிறதா என யோசித்துப் பார்த்தேன். 'தினமணி'யின் சாத்தியம், வாசக எல்லை, பக்க அளவு ஆகியவற்றை கருத்தில் கொண்டு பார்க்கும்போது ரவிக்குமாரின் கடிதத்தை அப்படியே போடுவதில் மாலனுக்குச் சிக்கல் இருந்திருப்பதற்குச் சாத்தியம் உண்டு என்றுதான் தோன்றுகிறது. ஆனால் ஒரு நல்ல பத்திரிகை ஆசிரியர் என்றால் இதனை அவர் முன்பே யோசித்திருக்க வேண்டும். நிச்சயம் இது ஒரு விவாதமாகத் தொடரும் என்பது அவருக்குத் தெரியாதா? ரவிக்குமாரின் முதல் கட்டுரையைப் பிரசுரிக்கும் முன்பாகவே அது தொடர்பான ஆதாரங்களையெல்லாம் கேட்டு, வாங்கிப் படித்துத் திருப்தியான பின்புதான் மாலன் அதனைப் பிரசுரிக்க ஏற்றுக்கொண்டார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. இவ்வளவுக்கும் பிறகு அக்கட்டுரை பிரசுரிக்கப் பட்டு பிறகு அதனை மறுத்து கடுமையான தாக்குதல்களுடன் கூடிய மூன்று கடிதங்கள் பிரசுரிக்கப்பட்டபின்பு ரவிக்குமாரின் கடிதத்தை ஏதோ ஒரு வகையில் பிரசுரித்திருப்பதுதானே நியாயமாக இருந்திருக்க முடியும்? இடம் ஒரு பிரச்சினையானால் ரவிக்குமாரின் பதிலைச் சுருக்கித் தரவும் தயார் எனச் சொல்லியும் கூட அதனைப் பிரசுரிக்க மாலனின் 'பத்திரிகை தர்மம்' இடம் கொடுக்கவில்லை.

தமிழவன் குழுவினரின் 'வித்யாசமான நடவடிக்கைகளைப் பார்க்கும்போது எனக்கு கோயமுத்தூர் பார்த்தசாரதியின் நினைவுதான் வருகிறது. 'இந்து' பத்திரிகையில் பார்த்தசாரதியின் பெயரை நீங்கள் அடிக்கடி பார்த்திருக்கலாம். ''முதன் முதலில்'' செய்தவர் என்கிற பெயரை எடுப்பதற்காகவும், கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுவதற்காகவும் அவர்

- ஆயிரம் பாம்புகள் அல்லது தேள்களுடன் கண்ணாடி அறைக்குள் ஒரு மாதம் வாழ்வார்.
- பின்புறமாகவே நூறு மைல் நடந்து செல்வார்.
- ஒருமாதம் தொடர்ந்து கையைத் தட்டிக் கொண்டே இருப்பார்.
- பிளேடுகளை விழுங்குவார்......

இலக்கிய உலகில் பார்த்தசாரதி நுழைய முடியாதபடி செய்து விட்டார்கள் தமிழவன் குழுவினர். இதன் மூலம் பார்த்தசாரதியை முதன் முதலாக வெற்றி கொண்டவர்கள் என்கிற பெருமையையும் கூட தட்டிச் சென்று விட்டார்கள். இவர்களிருப்பது பார்த்தசாரதிக்குத் தெரியாமல் போனது பரிதாபம்தான்!

www.padippakam.com

# ழான் போத்ரியாவும் எதிர் நவீனத்துவமும்

ரவிக்குமார்

''அவர் ஒரு விமர்சகர், படைப்பாளியும் கூட. தானொரு படைப்பாளி என்பதை நியாயப்படுத்த வேண்டும் என்கிற ஒன்றை மட்டுமே கவனத்தில் கொண்டு செயல்படுகிற விமர்சகராகவோ; அல்லது தானொரு விமர்சகர் என்பதையே நினைத்துக் கொண்டிருக்கிற படைப்பாளியாகவோ அவர் இருந்ததில்லை. அதனால்தான் அவரது அணுகு முறையானது பலவற்றை புலப்படச் செய்வதாக உள்ளதென நினைக்கிறேன்''1 —மோரீஸ் ப்ளான்ஷொ (MAURICE PLANCHOT) என்ற எழுத்தாளரைப் பற்றிப் பால் தெ மான் குறிப்பிட்டது இது. ப்ளான்ஷொவுக்கு நேரெதிராக நம் சூழலில் ஒரு உதாரணம் வேண்டுமென்றால் நாம் தமிழவனைக் குறிப்பிடலாம். தனது நாவல்களை நியாயப் படுத்த வென்றே விமர்சனம், தனது விமர்சனத்தை நினைவு படுத்துவதற்காகவே நாவல்— என உற்பத்தி செய்பவர் அவர். அவரைப் பின்தொடர்ந்தும் சில சிஷ்யர்கள், அவரது நாவல்களை வைத்துத் தங்களை விமர்சகர்களாகவும், அவரது விமர்சனங்களின் ஆசிர்வாதத்தால் படைப்பாளிகளாகவும் பட்டம் சூட்டிக் கொண்டவர்கள் (நாகார்ஜுனன், நஞ்சுண்டன், சண்முகம் இன்னபிற அதிநவீன எழுத்தாளர்கள்.)

மார்க்சியம் என்றால் என்னவென்றே அறியாத வெங்கட்சாமிநாதனால் மார்க்சிஸ்ட் ஆக்கப்பட்ட தமிழவனிடம், மார்க்சியம் கொஞ்சகாலம் பாடாய்ப்பட்டது, தற்போது பின் நவீனத்துவம் மாட்டிக் கொண்டிருக்கிறது. 'இதுதாண்டா போஸ்ட் மாடர்னிசம்' என்று அவரும் அவரது சகாக்களும் புகுந்து விளையாடுகிறார்கள். ஒரு பெயரையும் விடாமல் மென்று துப்புகிறார்கள். மேஜிக்கல் ரியாலிஸமா, பாலிம்செஸ்ட்ஹிஸ்டரியா, மெட்டாஃபிக்ஷனா எல்லாவற்றுக்கும் தமிழவன்தான் முதல் ஆள் என்று கைதட்டுவதற்காகவே ஒரு கூட்டம் புத்தகம் போட்டு வளர்க்கப் படுகிறது.

ஆனால் தமிழ்ச் சூழலில் இவற்றை எப்படி எதிர்கொள்கிறார்கள்? பெரும்பாலும் மௌனத்தால், சிலசமயம் வசைகளால். ஏனென்றால், தமிழவன் மற்றும் அவரது சீடர்கள் உதிர்க்கும் பெயர்கள் பலருக்கும் கிலி உண்டாக்குகின்றன. இதையெல்லாம் தேடிப்பிடித்துப் படித்துக் கஷ்டப் படுவதை விட சும்மாயிருந்து விடலாமெனப் பலரும் நினைக்கிறார்கள். எனவே தமிழவன் காட்டும் மேஜிக்குகளை எதிர்த்து அவர்களால் எதுவும் செய்ய முடிவதில்லை. வசைபாடும் சிலரோ நமக்குப் பழைய பஞ்சாங்கமே போதும் என்று சொல்கிற ரகமாக இருக்கிறார்கள். இந்த இரண்டு வகையான போக்குகளுமே ஒரு விதத்தில் தமிழவன் & சீடர்களை பின் நவீனத்துவவாதிகளென ஏற்றுக் கொள்வதாகவே இருக்கின்றன. இங்குதான் நமக்கு சிக்கல் உண்டாகிறது. போஸ்ட் மாடர்னிசத்தை மேலைநாடுகளில் உருவாக்கிய / பின்பற்றிய எந்தவொரு சிந்தனையாளரோடும் நாம் இந்த 'அறிவாளிகளை' ஒப்பிட முடியாது. அவர்களது போன்ற கடப்பாடோ, தீவிரசிந்தனையோ இவர்களுக்குக் கிடையாது என்பது மட்டுமின்றி இந்த 'அறிவாளிகளது' மொத்த இயக்கமும் சுய முன்னேற்றத்தை மட்டுமே இலக்காக கொண்டுள்ளது. இன்னுமொன்று, போஸ்ட் மாடர்னிசம் தரும் சாதகமான அம்சங்களை இவர்கள் பயன் படுத்துவதும் கிடையாது. மேலை நாடுகளில் இயங்குகிற போஸ்ட் மாடர்னிஸ்டுகள் தமது சமூகச் சூழல் பற்றிய தெளிவான ஆய்வுகளை முன் வைத்தே செயல் படுகின்றனர். ஆனால் இங்கு தினத்தந்தி படிப்பவருக்கு இருக்கும் அரசியல் புரிதல் கூட இல்லாத நிலையில்தான் தமிழவனும் அவரது சீடர்களும் உள்ளனர். திராவிட இயக்கம் பற்றிய அவர்களது புரிதல்ஒன்றே போதும், அவர்களது அரசியல் அறிவுக்கு சான்று கூற.

www.padippakam.com

''எழுத்து — வாசிப்பு — தமிழ்ச்சூழல்'' என்ற எனது கட்டுரை தினமணி சுடரில் வெளியான தினமே தி.க.சி கடிதம் போட்டிருந்தார். ''தமிழ் இலக்கியச் சூழலில் நிகழும் மோசடிகளை அம்பலப்படுத்துவதில் 1940 ஆம் ஆண்டுகளில் புதுமைப்பித்தன் குறிப்பிடத்தக்க பங்காற்றி னார்; '' ரசமட்டம '' என்னும் புனைபெயரில் அப்பேது அவர் எழுதிய கட்டுரைகள் பற்பல பிரபலங்களின் முகமூடிகளைக் கிழித்தெறிந்தன. அதே நற்பணியைத் தாங்களும் மேற்கொண்டிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி '' எனக் குறிப்பிட்டிருந்தார். எனது கட்டுரையிலிருந்து ஒரு பகுதியை — தமிழவன் பற்றியபகுதி -- வெளியிட்டு நல்லகட்டுரை என செம்மலர் இதழில் (நவம்பர் 94) பாராட்டியிருந்தார்கள்.

முகமூடிகளைக் கிழிப்பதை விடவும் வாசிப்பின் அரசியலை வலியுறுத்தி விமர்சனபூர்வமான அணுகுமுறையை ஊக்குவிப்பதுதான் எனது கட்டுரை யின் மையப்பொருளாக அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் பாராட்டிய வர்களும் சரி எதிர்த்து பதிலெழுதிய தமிழவனும் சீடர்களும் சரி இது பற்றி எதுவுமே பேசாதது ஏனென்று பார்க்க வேண்டும். நான் கட்டுரை யில் கூறியிருந்த சில விஷயங்கள் எடிட் செய்யப்பட்டது ஒரு முக்கிய காரணம். ழான் போத்ரியாவை (JEAN BAUDRILLARD) மேற்கோள் காட்டி நான் எழுதியிருந்ததை சுடரில் நீக்கிவிட்டார்கள். மக்கள்திரளின் மௌனத்தை எதிர்ப்பு யுக்தியாகக் கருத வேண்டுமென போத்ரியா கூறுவதை நான் குறிப்பிட்டிருந்தேன். தொடர்பு சாதனங்கள் பற்றிப் பேசும் போத்ரியா அவற்றை எதிர்கொள்வதற்கான வழிமுறைகள் சில வற்றை முன்மொழிகிறார். ''அடக்கு முறையை அடிப்படையாகக் கொண்ட அமைப்பில் தன்னிலையின் விடுதலைக்கான கோரிக்கை ஒரு எதிர்ப்பு யுக்தியாக இருக்கலாம்... தற்போதைய அமைப்பின் யுக்தியே பேச்சை, அர்த்தங்களை வரம்பின்றிப் பெருகச் செய்துள்ளது. எனவே இதனை எதிர்க்கிற சரியான யுக்தி—பேச்சை, அர்த்தத்தை நிராகரிப்பதா கவே இருக்கும்...இந்த அமைப்பின் தர்க்கத்தை அதற்கே திருப்பிவிடுவது அர்த்தத்தை பிரதிபலித்து விடுவது, ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியைப் போல எதையும் உள்வாங்கிக் கொள்ளாமல் பிரதிபலித்து விடுவது...'' என்கிறார் போத்ரியா.2 இந்த அடிப்படையில் மக்கள் திரளிடையே நிலவும் மௌனத்தை ஒரு எதிர்ப்பு யுக்தியாக அவர் கணிக்கிறார். ஆனால் நமது சூழலில் நிலவும் மௌனம் எதிர்ப்பு யுக்தி அல்ல, மந்தநிலையின் வெளிப்பாடு என நான் விளக்கியிருந்தேன். ஏனென்றால் பிரதியின் சமிக்ஞைகளை இவர்கள் பிரதிபலித்துத் திருப்பியனுப்பி விடுவதில்லை. மாறாக அவற்றின் ஆளுகைக்குத் தம்மை ஆட்படுத்திக் கொள்கிறார்கள்.

போத்ரியாவை விமர்சனமின்றி ஏற்றுக்கொண்டு நாகார்ஜுனன் எழுதியிருந்த ஒரு கட்டுரைக்கு (வித்யாசம்-1) பதிலாகவே எனது கட்டுரை உருவானது. ''முகமூடிகளை உடைக்க வேண்டும். உடைத்து, மக்கள் சார்ந்த கலாச்சாரத்தை மீட்டெடுக்க வேண்டும்', எனத் தலையங்கம் எழுதப்பட்டுள்ள அந்தப் பத்திரிக்கையில் அதன் ஆசிரியரா லேயே போத்ரியாவை ஆதரிக்கிற கட்டுரை எழுதப்படுவதை தமாஷ் என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் முகமூடிகளை (பொய்களை) உடைத்து முகத்தைப் (உண்மையை) பார்க்க வேண்டும் என்பதை போத்ரியா ஏற்றுக் கொள்வதில்லை. அத்தகைய அணுகு முறைகளை அவர் கடுமையாகச் சாடுகிறார். மார்க்சியத்தின் மீது அவர் வைக்கும் விமர்சனங்களில் இந்த விமர்சனமும் ஒன்று. மாடர்னிச காலகட்டத்து விமர்சன அணுகுமுறையான இந்தப்போக்கை விமர்சித்து எழுந்ததுதான் போஸ்ட் மாடர்னிசம் என்பதையும் நாம் நினைவுபடுத் திக்கொண்டாக வேண்டும்.

www.padippakam.com

தொடர்பு சாதனங்களை நாம் ஒன்றுமே செய்துவிட முடியாது என்பது போன்ற ஒரு கையறு நிலையை நாகார்ஜுனன் முன்மொழிய, போத்ரியா உள்ளிட்ட பலரும் எதிர்ப்பு யுக்திகளை முன்வைப்பதை நான் எனது கட்டுரையில் சுட்டிக் காட்ட விரும்பினேன். ஆனால் போத்ரியா வின் மேற்கோள் சுடரில் எடிட் ஆனதால் இதெல்லாம் வெளிப்படை யாகத் தெரியாமல் போய்விட்டது. இருப்பினும்கூட வாசிப்பு பற்றி நான் எழுதியிருந்தவற்றை போத்ரியாவின் கருத்தாக்கங்களை முன் வைத்து நாகார்ஜுனன் பேசியிருக்க வேண்டும், பேசவில்லை. ஏனென் றால் இந்த சமயத்தில் ஞானக்கூத்தனை போஸ்ட் மாடர்னிஸ்டாக முடி சூட்டும் மும்முரத்தில் அவர் இருந்துவிட்டார்.

போத்ரியாவின் அணுகுமுறை முழுக்க முழுக்க ''முன்னேறிய மேற்கத்திய ஜனநாயக நாடுகளை'' மையமாகக் கொண்டுள்ளதை கிறிஸ்டோபர் நாரிஸ் சுட்டிக் காட்டுகிறார். அது மட்டுமின்றி போத்ரியாவால் நிராகரிக்கப்படும் உண்மை / பொய் என்கிற வேறுபாடு களுக்குள் அவரே எப்படி மாட்டிக் கொண்டிருக்கிறார் என்பதனையும் நாரிஸ் தெளிவு படுத்துகிறார்.3 ''பிற்கால முதலாளியத்தின் கலாச் சார வெளிப்பாடு'' என ஃப்ரெடரிக் ஜேம்சனால் குறிப்பிடப் படும் போஸ்ட் மாடர்னிச அணுகுமுறையை இந்திய சமூக அமைப்பு பற்றிய புரிதலில்லாமல் அப்படியே கொண்டு வந்து பொருத்திவிட முடியாது. நடிகர்கள் முதலமைச்சர்களாகிறார்கள்; இங்கேயும் சில இடங்களில் ஸ்டார் டி.வி தெரிகிறது என்பதனால் இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றுதான் எனக் கூறிவிட முடியாது. ''தமிழகத்தில் எல்லாமே சினிமாக் கலாச்சாரத்தால் தீர்மானிக்கப்படுகிறது,'' எனக் கூறுவது மிகவும் மேலோட்டமான புரிதலின் காரணமாகத்தான். அதிகாரத்தின் செயல்பாடுகளை அரசியலிலோ/கலாச்சாரத்திலோ ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக சுருக்கிப் பார்க்கும் இத்தகைய அணுகுமுறை எதற்கும் பயன்படாது,

இன்னும் முக்கியமான ஒன்று: இங்கு நிலவும் சாதியக் கருத்தி யலைக் கணக்கில் கொள்ளாமல் நவீனத்துவத்தையோ பின்நவீனத்து வத்தையோ பேசுவது சாத்தியமே இல்லை. ஆனால் தமிழவனும் சீடர் களும் பேசுகிற போஸ்ட் மாடர்னிசம் இவற்றையெல்லாம் கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை, ஆகவேதான் அது போஸ்ட் மாடர்னிசமாக இல்லாமல் Pre modern ஆக Anti modern ஆக மாறிவிடுகிறது.4 (இந்தியச் சூழலில் Anti modern என்பது பார்ப்பனீயத்துடன் உறவு கொண்டுள்ளதை நாம் அறிவோம்) திராவிட இயக்கத்தை பாசிச வன்மத்தோடு கேலி செய்யும் ஞானக்கூத்தனைப் பாராட்டுவதிலும்; தலித்துகளின் எதிரிகள் பார்ப்பனர்களல்ல மற்ற சாதியினர்தான் எனக் கூறி பார்ப்பனர்களைக் காப்பதிலும் இதனை வெளிப்படையாகவே நாம் காணமுடியும். சிறுபத்திரிகை X பெரும்பத்திரிகை என்பதாக இவர்கள் கட்ட முயலும் இருமை எதிர்விலுங்கூட இத்தகைய போக்கே ஊடாடி நிற்கிறது. போஸ்ட் மாடர்னிசமோ elite க்கும் Popular க்கும் இடையி லான எல்லையை அழிப்பதாயிருக்க இவர்களோ அதனை மறுஉறுதி செய்பவர்களாயிருப்பதைப் பார்க்கிறோம். எனவேதான் இவர்களது நிலைப்பாடு Anti Modern ஆனது — அதாவது, பார்ப்பனீயத்தோடு தொடர்புடையது என்கிறோம்.

□ □ □

போத்ரியாவை விமர்சிப்பதென்பது அவரது கருத்துக்கள் எல்லா வற்றையுமே நிராகரிப்பது என்பதாகாது. மார்க்சியத்தின் மீதான அவரது விமர்சனங்கள் முக்கியமானவை. ''பாட்டாளி வர்க்கத்தால் தோற்கடிக்கப்பட்டாலும் கூட முதலாளித்துவமானது தனது உள்ளார்ந்த முரண்பாடுகளின் தர்க்கத்தோடு வளர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை. ஒரு Ideal ஆன அர்த்தத்தில் மார்க்ஸின்ஆய்வு முறையானது இன்னமும்கூட குறைகூற முடியாத ஒன்றாகவே உள்ளது. ஆனால், மூலதனமானது தனது இருப்புக்குக் கடுமையான நெருக்கடி வரும்போது

படிப்பகம்

www.padippakam.com

தன்னைத்தானே Trans politicize செய்து கொள்ளும்; உற்பத்தி உறவுகள், அரசியல் முரண்பாடுகள் போன்றவற்றுக்கு அப்பால் ஒரு சுழல் பாதைக்குள் தன்னை செலுத்திக் கொள்ளும்; சுயேச்சையான, சுதந்திரமான, களிப்பு மிக்க வடிவமொன்றை எடுத்துக் கொண்டு, இவ்விதமாக உலகைத் தனது பிம்பத்தின் அடிப்படையில் கட்டமைக்கும் என்பதை மார்க்ஸ் எதிர்பார்க்க வில்லை''5 என்கிறார் போத்ரியா. மார்க்சியம் கடந்த இடதுசாரி (Post Marxist Left) எனக் குறிக்கப்படும் அவர், மார்க்சியம் இச்சையை (Desire) கவனத் திலெடுத்துக் கொள்ள வில்லை என்கிறார். பயண்மதிப்பு பற்றிய எந்தவொரு விளக்கமும் சமூக வயப்பட்ட இச்சைகள், தேவைகள், எதிர்பார்ப்புகள், ஆகியவற்றைக் கணக்கில் கொள்ள வேண்டும். ஏனென்றால் பொதுவாக மதிப்பு என்னும் களனை இவைதான் கட்டமைக்கின்றன என்கிறார் போத்ரியா. இவை புறக்கணிக்க முடியாத விமர்சனங்களாயுள்ளன. இவற்றை கவனத்தில் கொள்கிறோம். போத்ரியா மட்டுமின்றி க்ராம்ஸி, அல்தூஸர், ஃபூக்கோ, செய்த், ஈக்கோ எனப் பலரது கருத்தாக்கங்களையும் இப்படியாகவே நாங்கள் எதிர்கொள்கிறோம், கையாள்கிறோம். தமிழவனும் சீடர்களும் செய்வதிலிருந்து இப்படியாகத்தான் வேறுபடவும் செய்கிறோம். (இந்த ரீதியிலான பல்வேறு விமர்சனங்களை வெளிவர இருக்கும் அ.மார்க்ஸின் 'உடைபடும் மௌனங்கள்' என்ற நூலில் காணலாம்.) பெரியார் சிந்தனைகளை மறுவாசிப்பு செய்தல், தலித் பிரச்சனையிலான எங்களுடைய ஈடுபாடு முதலானவற்றையும் இந்த பின்புலத்தில் வைத்தே பார்க்க வேண்டும்.

☐ ☐ ☐

தமிழவனும் சீடர்களும் சுடரில் நியாயம் கேட்டு எழுதிய கடிதங்கள் அப்படியே வெளியிடப்படுகின்றன. நகைச்சுவை உணர்ச்சி இல்லாதவர்கள் இயங்கியலைப் புரிந்து கொள்ளவே முடியாது என்கிறார் ப்ரெக்ட். அதனடிப்படையிலேயே இந்தக் கடிதங்கள் இங்கே வெளியிடப் படுகின்றன. இத்த மறுப்புக் கடிதங்களுக்குப் பதிலாக நான் தினமணிக்கு எழுதியது ''புதிய செய்திகள் இல்லாததால் பிரசுரிக்க இயலவில்லை'' என்ற குறிப்போடு திரும்பி வந்தது. அது சரிதானா என்பதை வாசகர்களே தீர்மானிக்கட்டும்.

தமிழ்ச்சூழலில் இன்று எல்லா சர்ச்சைகளும் ஏதோ ஒரு விதத்தில் தலித் பிரச்சனையோடு உறவு கொண்டுள்ளன. இந்த சர்ச்சையையும் நுண்மையாகப் பார்த்தால் மேற்சொன்ன விஷயம் புலனாகிவிடும்.

இது, அதிகம் படித்தவர்கள் யாரென்று நிரூபிப்பதற்காக நடக்கும் போட்டி அல்ல. அறிவுக்கும், இங்கு நிலவுகிற சாதி அமைப்பில் செயலாற்றும் அதிகாரத்திற்கும் — இடையிலான உறவைப் பற்றிய சர்ச்சை. இந்த விவாதத்தில் இச்சிறு பிரசுரமும் சுயேச்சையானதொரு சுழல் பாதைக்குள் தன்னை செலுத்திக் கொள்கிறது என்று கூறவும் செய்யலாம்.

குறிப்புகள்;


1 An Interview with Paul de man
by Stephano Rosso; Critical Inquiry vol 12; No 4 1986

2 The Implosion of Meaning in the Media and the Implosion of the Social in the Masses — Jean Baudrillard — in The Myths of Information — Ed — Kathleen Woodward. Routledge&Kegan Paul, London 1980.

3 What is wrong with Post modernism—Christopher Norris. Harvester wheat sheaf. Newyork 1993

4 பார்க்க: Jurgen Habermas ன் கட்டுரை Culture and Society Ed Jeffrey C. Alexander; Steven Seidmen. Cambridge University Press; Newyork 1990

5 The Transparency of Evil - Jean Baudrillard, verso. 1993


படிப்பகம்

www.padippakam.com

# எழுத்து - வாசிப்பு - தமிழ்ச்சூழல்

## ரவிக்குமார்

தமிழின் அறிவுச் சூழலில் தற்போது ஒரு ஏமாற்றுவித்தை பரவிக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தில் வந்துள்ள நூல்களை மொழிபெயர்க்கும் போது மூலத்தை எழுதிய ஆசிரியரின் பெயருக்குப் பதிலாக தமிழில் மொழி பெயர்த்தவரின் பெயரை வெளியிடுகிற போக்கு அதிகரித்துக் கொண்டு வருகிறது. இதைக் காப்பி என்றும் சொல்ல முடியாது. திருட்டு என்றும் சொல்ல முடியாது. பெயரிடப்படாத புதுவகையான மோசடி இது.

''ஒரு குடிசையிலிருந்து...'' என்று ஒரு நூல் இந்தியாவின் சாதிப் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இந்த நூல் La Chaumiere Indienne என்ற தலைப்பில் ஹென்றி பெர்னார்டின் தெ செய்ந்த்பியர் என்பவர் பிரஞ்சு மொழியில் எழுதிய நூலை மூலமாகக் கொண்டது என்ற விவரம் புத்தகத்தின் உள்ளே குறிப்பிட்டிருக்கிறது. எனினும், அட்டையில் அதைப் பற்றிய குறிப்புகள் ஏதுமில்லை. இந்த நூலை மொழிபெயர்த்த இராவணன் என்பவரின் பெயர் மட்டும்தான் அட்டையில் உள்ளது. தவிரவும் 1790-ல் எழுதப்பட்ட மூலநூலை யாரேனும் படித்துப் பார்க்க விரும்பினால் அதுவும் சாத்தியப்படாது. ஏனென்றால் மூலநூலைக் கண்டுபிடிப்பதற்கு ஏதுவாக அதன் பதிப்பு விவரங்கள் எதுவும் இந்த நூலில் கிடையாது. பாண்டிச்சேரியில் உள்ள பிரஞ்ச் இன்ஸ்டிட்யூட்டில் ஆய்வாளராக இருக்கும் நண்பர் ஒருவர் கடந்த மூன்று மாதங்களாக இந்த நூலின் பிரஞ்சு மூலத்தைக் கண்டுபிடிக்கப் போராடிக் கொண்டிருக்கிறார்.

''ஹைகூ என் தோழி'' என்ற தலைப்பில் சமீபமாக ஒரு ஹைகூ தொகுப்பு வந்துள்ளது. அட்டையில் அதை எழுதியவரென மித்ரா என்பவரின் பெயர் அச்சிடப்பட்டுள்ளது. உள்ளே சில பக்கங்களைத் தாண்டிப் பார்த்தால் தான் அது சஞ்சீவ் பாட்லா என்பவர் எழுதிய ''ஹைகூ மை ப்ரண்ட்'' என்ற நூலின் மொழியாக்கம் என்பது தெரியவரும். மித்ரா ஒரு தமிழ்ப் பேராசிரியை என்பதோடு முன்பே பிரபலமான ஒரு ஹைகூ கவிஞரும் கூட. பெங்களூரிலிருந்து தமிழுக்குத் தொண்டாற்றிவரும் காவ்யா நிறுவனம் ''பெண்ணியம்'' என்ற தலைப்பில் நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது. இதனைத் தொகுத்திருப்பவர் காவ்யா நிறுவனத்தின் உரிமையாளரும், பேராசிரியருமான டாக்டர் சண்முக சுந்தரம். இந்த நூலிலும் மேலே கண்ட அதே மாதிரியான குழப்படிகள். இந்த நூலில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான கட்டுரைகள், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள்தான். ஆனால், அவை யாவுமே மொழி பெயர்த்தவர்களின் பெயர்களிலேயே வெளியாகியுள்ளன. துப்பறிந்து கண்டுபிடித்தாலொழிய அந்தக் கட்டுரைகளை ஒரிஜினலாக எழுதியவர்களின் பெயர்களை நீங்கள் அறிந்து கொள்ளவே முடியாது. அட்டையிலும் கூட மொழிபெயர்ப்பு செய்தவர்களின் பெயர்களே அச்சிடப்பட்டுள்ளன.

இதில் இன்னொரு சோகம் என்னவென்றால் இந்த நூலைப் பற்றி "இந்தியா டுடே" இதழில் விமர்சனம் எழுதியுள்ள பேராசிரியர் வேங்கடராமன் போன்றவர்களேகூட இந்த நூலில் உள்ள கட்டுரைகளை எழுதியவர்கள் அந்த மொழி பெயர்ப்பாளர்கள்தான் என நம்புகிற வகையில் மூல ஆசிரியர்களின் பெயர்கள் மறைக்கப்பட்டுள்ளன. அவர் தனது விமர்சனத்தில் மூல ஆசிரியர்கள் என்ற எண்ணத்தில் மொழி பெயர்ப்பாளர்களைப் புகழ்ந்திருக்கிறார். பெண் நிலைவாதி என்று தன்னைக் கருதிக்கொள்கிற இந்தியா டுடே தமிழ்ப் பதிப்பின் சீனியர் காப்பி எடிட்டரும் இதை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அப்படியே அவருக்குத் தெரிந்திருந்தால் கூட ஒன்றும் ஆகியிருக்கப் போவதில்லை ஆங்கிலக் கதைகளைத் தன் கதைகளைப் போலத் தன் பெயரில் அவரும் வெளியிடுவது உண்டு. அதனால் தனக்கு இப்படி ஒரு தொடர்ச்சி வாய்த்ததேயென்று அவர் சந்தோஷப் பட்டிருந்தாலும் வியப்பதற்கில்லை.

www.padippakam.com

தமிழவன் என்ற விமர்சகப் படைப்பாளி நாவல் என்ற பெயரில் வெளியிட்ட ''ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்'' என்ற பிரதியின் அடையாளங்களை காப்ரியல் கார்ஷியா மார்க்யெஸின் One hundred years of solitude என்ற நாவலுக்குள் கண்டுபிடித்து சிலர் சுட்டிக்காட்டியபோது தமிழவன் தந்த விளக்கம்: மார்க்யெஸின் நாவலைப் படிப்பவர் எவரும் எனது நாவலை எழுதிப்பார்ப்பது தவிர்க்க முடியாது. தமிழவன், தனக்குத் துணையாக போர்ஹேஸை அழைத்து வந்து நிறுத்தினார். ''போர்ஹே, ஒரு படைப்பை மொழி பெயர்க்கும் போது மொழிபெயர்ப்பாளன் எப்போதுமே இன்னொரு படைப்பைத்தான் எழுதுகிறான் என்கிறார். அப்படிப் பார்த்தால் மார்க்யெஸ் நாவலின் மொழிபெயர்ப்பு என் நாவல்.'' இது தமிழவன் தந்த தத்துவ விளக்கம். இப்படிபடைப்பாளிகளும் விமர்சகர்களும் மோசடி வேலைகள் செய்து திரிய முதன்மையான அடிப்படையைத் தருவது வாசகர்கள். இதற்கு அருமையான உதாரணம் ஒன்றைச்சமீபத்தில் நான் சந்தித்தேன். பாண்டிச்சேரியில் தினமணிவைர விழா நடந்த போது கவிஞர் பழமலய் அதில் கலந்துகொள்ள வந்திருந்தார்.

அந்த விழா நடப்பதற்கு முந்தின நாள் தினமணிசுடரில் கலாட்டா கவிதைகள் என்ற தலைப்பில் சில கவிதைகளும் வந்திருந்தன. ''ஊடகம்'' என்ற சிற்றிதழ் தமிழ்நாட்டின் முன்னணிக் கவிஞர்களைக் கிண்டலடித்து அவர்களுடையது போலவே சில கவிதைகளை எழுதி அவர்களது பெயர்களிலேயே வெளியிட்டிருந்தது. அவற்றைத்தான் தினமணிசுடரில் போட்டிருந்தார்கள். இந்தப் பின்னணி பற்றி தெளிவான குறிப்பும் அதில் எழுதப்பட்டிருந்தது. அப்படிப் போடப்பட்டிருந்த கவிதைகளில் கவிஞர் பழமலய் பெயரிலான கவிதையும் ஒன்று. தினமணி விழாவில் பழமலயைப் பார்த்த பலரும் முதல் நாள் வந்திருந்த கவிதை அவரே எழுதியதென நினைத்து அவரைப் பாராட்டித் தீர்த்தார்கள். அப்படிப் பாராட்டியவர்கள் பேராசிரியர்கள், எழுத்தாளர்கள், விவரமானவர்கள். ஒவ்வொருத்தர் பாராட்டும் போதும்; பழமலய் சங்கடப்பட்டார். அந்தக் கவிதை தன்னால் எழுதப்பட்டதில்லையென அவர் விளக்கினார்.

இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது நம்மிடையே பழக்கமாகியுள்ள வாசிப்பு மனோபாவத்தைத்தான். பிரதியின் (Text) மீது இம்மியளவும் சந்தேகமின்றி அப்படியே நாம் நம்பிவிடுகிறோம். இப்படி நம்பி ஏற்றுக் கொள்வதில் நமக்கு அனுகூலம் இருக்கிறது. சந்தேகப்பட்டுக் குழப்பிக் கொள்வதை விட பணிந்து ஏற்று கொள்ளும் மனோநிலை நமக்கு ஒரு வகையில் நல்லதாகத்தெரிகிறது. இப்படி வாசகர்களாகிய நாம் பணிந்து போவதால்தான் இங்கே மோசடிப் பேர்வழிகள் அறிவு ஜீவிகளாகவும் நம்மை வழி நடத்துபவர் களாகவும் உலவ முடிகிறது.

வாசகர்களின் மௌனத்தை எதிர்ப்பு யுக்தியாக நம்மால் கருத முடியவில்லை. மாறாக மந்தநிலையின் வெளிப்பாடு என நினைக்க வேண்டியுள்ளது.

ஆகவே, வாசகரிடையே நிலவும் மௌனத்தைத் தகர்த்து எல்லாப் பிரதிகளின் மீதுமான ஐயத்தை உண்டு பண்ண வேண்டியது இங்கே அவசரத் தேவையாக உள்ளது. முன்னெப்போதை விடவும் இந்தத் தேவை அதிகரித்துள்ள இன்றைய சூழலில்தான் ஏமாற்றுவித்தைகள் அறிவுச்செயல்பாடுகளென முன்வைக்கப்படுகின்றன. இப்படியான மோசடிகளை எதிர்த்து அம்பலப்படுத்த வேண்டியது அறவியலின் அடிப்படையிலான விஷயமாக மட்டுமின்றி, வாசகர்களின் சுதந்திரத்தோடும் தொடர்புடைய விஷயமாகவும் உள்ளது.

இதனை வாசகர்களாகிய நாம் உணராத வரைக்கும் நிலைமை இப்படித்தான இருக்கும்; பதிப்பக உரிமையாளர்கள் தொகுப்பாசிரியர்களாகப் பிரகாசிப்பார்கள். மொழிபெயர்ப்பாளர்கள் ஆசிரியர்களெனச் சொல்லிக் கொள்வார்கள்; ''நிழல் முற்றம்'', ''நிலா முற்றமாகும்'' எழுத்து வியாபாரிகள் இலக்கிய மேதைகளாய்ப் பட்டம் கட்டிக் கொள்வார்கள்; இலக்கியத்தின் எதிர் காலத்தைத் திருட்டு எழுத்தாளர்கள் கணித்துக் கொண்டிருப்பார்கள்.

www.padippakam.com

# நியாயமா?

என் நாவல், ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் காப்ரியேல் கார்ஸியா மார்க்யொஸின் உந்துதலால் எழுதப்பட்டது என்று நானே அதன் முன்னுரையில் எழுதியுள்ளேன். நான் முன்னுரையில் குறிப்பிடாதது போலவும் சிலர் அவர்களாகவே கண்டுபிடித்து என்னிடம் கேட்டது போலவும் சுடரில் கட்டுரை எழுதிய நபர் மோசடித்தனமாகக் கூறுகிறார்.

கார்ஸியா மார்க்யொஸின் One hundred years of solitude-ன் அடையாளங்கள் என் நாவலில் உள்ளன என்று கூறி ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு என்று தொனிக்கும்படி கட்டுரை நபர் எழுதுகிறார். இது முழுப்பொய். என் நாவலைப் பற்றி அனைத்திந்திய அளவில் பிரபலமாக இருந்த பத்திரிக்கையாசிரியரும் ஆங்கிலத்தில் நல்ல நூலறிவு உள்ளவருமான என்.எஸ்.ஜெகந்நாதன் ''இண்டியன் லிட்டரேச்சர்'' என்ற சஞ்சிகையில் இப்படிக் கூறுகிறார்: 'நாவலின் கதை கேரளத்திற்கருகில் தெற்கத்திய பகுதியில் வாழும் நாடார்களின் வரலாற்றின் நெளிவு சுளிவுகளைப் பற்றியது''. கார்சியா மார்க்யொஸ் கேரளத்திற்கு அருகில் தெற்கத்திப் பகுதியில் வாழும் நாடார்களைப் பற்றி எழுதியிருக்கமாட்டார் என்று நாம் நிச்சயமாக நம்பலாம்.

இப்போது கார்ஸியா மார்க்யொஸ் நாவலின் அடையாளங்களைச் சிலர் என் நாவலில் கண்டுபிடித்தார்கள் என்பது அபாண்டம் என்பது எல்லோருக்கும் புரியும். அது போல் கட்டுரை எழுதிய நபரின் நுட்பங்களைப் புரியாத மனத்தை அடுத்த உதாரணத்திலிருந்து அறியமுடியும்.

இவரின் பொய்யின்படி சிலர் மார்க்யொஸின் நாவலின் அடையாளங்கள் என் நாவலில் உள்ளன என்று சுட்டிக் காட்டியபோது நான் ஒரு விளக்கம் கொடுத்தேனாம். இந்த நபர் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் நாவலைப் பற்றி நான் விரிவாக எழுதிய 'மேலும்' காலாண்டிதழ் வெளியிட்ட ''புதிய நாவல் எழுத்து முறையும் தமிழ் வரலாறும்'' என்ற சிறுபிரசுரத்தைக் குறிப்பிடுகிறார். அப் பிரசுரத்தில், நாவலின் முகவுரையில் மார்க்யொஸ் நாவல் தந்த உந்துதல் பற்றிய பிரஸ்தாபம் தேவையில்லையே என ஆலோசனை தந்த அசோகமித்திரன் கருத்தைச் சுட்டி நான் என் கருத்தைக் கூறியிருந்தேன். அசோகமித்திரன், மார்க்யொஸ் நாவலை நான் திருடிவிட்டேன் என்று சொல்லவில்லை என்பதோடு, அவர் கணையாழியில் தமிழின் பத்து சிறந்த நாவல்களில் இதுவும் ஒன்று என்றே கணித்திருந்தார் என்பதையும் கூற விரும்புகிறேன்.

அசோகமித்திரன் ஆலோசனை பற்றி நான் கூறிய கருத்து, என் நாவல், மொழிபெயர்ப்பு - மார்க்யொஸின் அடையாளம் கொண்டது- என்ற குற்றச்சாட்டுக்கு நான் தந்த விளக்கமாகத் திரிக்கப் படுகிறது.

நான்காவது குற்றச் சாட்டாக மார்க்யொஸின் நாவலை மொழிபெயர்த்து என் பெயரைப் போட்டுக் கொண்டேன் என்று சிலர் சொன்னவுடன் நான் போர்ஹெ என்ற எழுத்தாளரின் மேற்கோளைச் சொல்லி என்னை நியாயப்படுத்தினேனாம். அதாவது போர்ஹெ, ''மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்பாளன் எப்போதும் இன்னொரு படைப்பைத்தான் எழுதுகிறான்'' என்று சொன்னதை நான் சொல்லி என் மேல் நாட்டுத் திருட்டை நியாயம்தான் என்று கூறினேனாம்.

இந்த அநியாயமான குற்றச்சாட்டுக்கு என் பதில் இது: இங்கு ''மொழிபெயர்த்தல்'' என்பது ஆங்கிலச் செய்தியைத் தமிழில் மொழிபெயர்த்துத் தருதல் என்ற அர்த்தத்தில் அல்ல. மொழிபெயர்த்தல் என்பது கலாசார மாற்றம் என்ற உயர் அர்த்தத்தில் ஒவ்வொரு படைப்பும் கொஞ்சம் இன்னொரு படைப்பையும் கொஞ்சம் புதுமையையும் கொண்டிருக்கும் என்ற அர்த்தத்தில். சிலப்பதிகாரத்தில் கொஞ்சம் சங்க

www.padippakam.com

இலக்கியமும், கொஞ்சம் புதுமையும் இருக்கும் என்ற அர்த்தத்தில். நான் அச்சொல்லைப் பயன்படுத்திய சூழல் புரியாமல் 'வால் மட்டும் போகவில்லை' என்ற கதையாக 'மொழிபெயர்த்தல்' என்ற தொடரைத் தவறாகப் புரிந்துள்ளார், சுடர் கட்டுரையாளர். மனம் போனபடி குற்றச்சாட்டுகளை இவ்வாறு குவிப்பது நியாயமா?

—**தமிழவன்,** பெங்களூர்.

ஃ ஃ ஃ

'தமிழவனின் ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் நாவல் படைப்பு ரீதியான மோசடி என்று கூறப்பட்டுள்ளது குறித்து வருத்தம் அடைந்தேன். நாவல் வெளியான வருஷம் 1985. அதற்கு தமிழவன் ஒரு வார்த்தை என்று குறிப்பு எழுதியுள்ளார். அதில் கூறப்படுவதாவது: ''இந்த நாவல் ஒரு புது எழுத்தைத் தருகிறது. இவ்வகை புதுவகை நாவலை எழுத உந்துதலாக அமைந்தவர் நம்மைப் போன்ற ஒரு சமூகத்தைச் சேர்ந்த காப்ரியேல் கார்சியா-மார்க்யொஸ் ஆவார். இன்று இவரது நாவல் எழுத்தைப் பின்பற்றி அநேக உலக மொழிகளில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இந்த வகையில் ஒரு புதுவகை நாவல் உலக இலக்கியத்தில் உருவாகிக் கொண்டிருக்கிறது எனலாம், இது நாவல் அல்ல சரித்திரம் என்பாரும் உண்டு. எப்படியோ தமிழ் மக்களைப் பற்றி வேறு முறைகளில் சொல்லமுடியாத விஷயங்களை இம்முறையைப் பின்பற்றினால் சொல்ல முடிகிறது. இவ்வகையில் இந்த நாவலைத் தமிழ் மரபிலிருந்து எழுந்துள்ள புதுக்கிளை எனலாம்.''

இந்த நாவலுக்கு நான் எழுதியுள்ள முன்னுரையில், ''எந்த ஒரு கலாச்சாரமும் தன்னிடமுள்ள தொல்கதை போன்ற வரலாற்றைத் தனக்கே கதையாக சொல்லிக்கொள்வதுண்டு. அந்தக் கலாச்சாரத்தின் கட்டுமானத்தை வெளிக்காட்டுவதாக அக்கதை அமைகிறது. அதுபோலவே தன்னிடமுள்ள கதையை மீண்டும் ஒரு கலாச்சாரம் சொல்லிப் பார்ப்பதும் உண்டு. உதாரணமாக, லத்தீன் அமெரிக்க எழுத்தாளரான ஜோர்ஜ்லூயி போர்ஹெவின் சிறுகதையில் வரும் நாயகன் ஏற்கனவே மிகையில் செர்வான்டீஸ் எழுதிய டான் கெஹாட்டேவின் கதையை எழுதிப்பார்க்கிறான். வார்த்தைக்கு வார்த்தை அச்சாக இருக்கும் அந்தக் கதை அவனுக்குப் புதிய அர்த்தத்தைக் கொடுக்கிறது. லத்தீன் அமெரிக்காவின் இலக்கிய வரலாறே மீண்டும் செர்வான்டீஸின் கதையைத் திருப்பி எழுதுவதுதான் என்பதாக இங்கு உணர்த்தப்படுகிறது.

இப்படி ஏற்கனவே நமக்குத் தெரிந்த-சொல்லப்பட்ட-தமிழ்நாட்டு இந்திய, மனிதர்களின் கதையைத்தான் இங்கு படிக்கப் போகிறோம்'' என்று எழுதியுள்ளேன். பிரம்மராஜன் வெளியிடுகிற மீட்சி, க.நா.சு. ஆசிரியராக இருந்த ஞானரதம் பத்திரிக்கைகளில் என் முன்னுரை வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட்டது. இன்று வரை இந்திய உலக மரபுகளில் உள்ள தொல்கதைகள், மந்திர தந்திர சடங்குகள் ஆகியவற்றைத் திரும்ப எழுதுவது—அழித்து எழுதுவது பற்றிய விவாதம் தமிழ்ச்சூழலில் நடந்து வருகிறது. Palimpsest History என்ற கருத்தாக்கம் வரை வந்து விட்ட இதன் ஒரு பகுதியாகத்தான் தமிழவன் புதிய நாவல் எழுத்து முறையும் தமிழர் வரலாறும் என்கிற சிறுநூலை 'மேலும்' என்கிற இதழுடன் சேர்த்து சென்ற ஆண்டு வெளியிட்டு, அதில் தன் நாவல் பற்றிய விவாதங்களை எதிர்கொள்கிறார். விவாத அடிப்படையுடன் நாவலுடனும் அதைத்தொடர்ந்தும் எழுதப்பட்டவற்றைக் கொச்சைப்படுத்தி ரவிக்குமார் தங்கள் பத்திரிகையில் எழுதியவற்றை நீங்கள் தவிர்த்திருக்க வேண்டும்.

—**நாகார்ஜுனன்,** சென்னை-4

பெண்ணியம் நூலில் 7 கட்டுரைகள் உள்ளன. இவற்றில் 4 கட்டுரைகள் மொழிபெயர்ப்புகள்; 3 கட்டுரைகள் தெரசா மகளிர் பல்கலைக் கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் தேவதத்தாவும், விநோத் மற்றும், சிவகுமாரும் எழுதிய கட்டுரைகள். அனைத்தும் ஆய்வு, மேலும், நிகழ், இலக்கிய வெளி வட்டம் ஆகிய இதழ்களில் வெளி வந்தவை. அவற்றை அப்படியே மாற்றாமல் மறைக்காமல் இந் நூலில் சேர்த்துள்ளோம். மொழிபெயர்க்கப்பட்ட கட்டுரைகளில் அவற்றுக்கு முற்பகுதி அல்லது இறுதியில் தெளிவாக மூலக் கட்டுரையாசிரியரின் பெயரும் கட்டுரையின் பெயரும் கொடுக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு கட்டுரையின் தலைப்புகளோடும், கட்டுரையாசிரியர்கள் மற்றும் மொழிபெயர்த்தவரின் பெயர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. பின் அட்டையிலும் மொழிபெயர்த்தவர்களின் மற்றும் கட்டுரையாசிரியர்களின் பெயர்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் சில மூலக்கட்டுரையாசிரியர்களின் பெயர்களை மறைத்து மோசடி செய்து விட்டதாகப் பழி தூற்றியுள்ளீர்கள். எனக்கு அத்தகைய நோக்கம் இல்லை. சொந்தக் கட்டுரைகள், மொழிபெயர்ப்பு கட்டுரைகள் என இரண்டும் கலந்ததால் ஒரு ஒழுங்குக்காக இவ்வாறு செய்தேன்.

அதோடு இவற்றை ஏற்கனவே வெளியிட்ட சிறு பத்திரிகைகளும் இந்த முறையையே கையாண்டிருந்தன. அட்டையில் முழு நூலும் மொழிபெயர்ப்பாகஇருந்தால் மூலநூலாசிரியரையும் மொழிபெயர்ப்பாளர் பெயரையும் அச்சிடுவது வழக்கம். எங்களது சமஸ்காரா, பணியம்மா, பசவண்ணர், மதுரைக்காண்டம் போன்றவற்றில் இவற்றைக் காணலாம். 'பெண்ணியம்' நூலில் தனிக் கட்டுரைகளும் மொழிபெயர்ப்புகளும் கலந்திருந்ததால் பின் அட்டையில் தமிழ்ப் பெயர்களை மட்டுமே சேர்த்தேன். பெண்ணியம் புதுத்துறை. தமிழில் அறிமுகம் செய்யும் அனைவரும் பிற மொழி நூல்களைத் தழுவித்தான் எழுதியாக வேண்டும். இது தவிர்க்க முடியாதது. அந்நியத் தன்மையைக் குறைத்து தமிழ் எழுத்தாளர்களால் பிரபலப் படுத்துவதுதான் நோக்கமே ஒழிய மோசடியோ, ஏமாற்றோ அல்ல என்பது முக்காலும் உண்மை. பதிப்பக உரிமையாளர்களே தொகுப்பாசிரியர்களாகப் பிரகாசிப்பார்கள். இது ஒரு வகைக் கிண்டல். நான் பதிப்பக உரிமையாளன் மட்டுமல்லன். தமிழ்ப் பேராசிரியன். கடந்த 25 வருடங்களாக சிறு பத்திரிகைகளோடும், நவீன எழுத்துகளோடும், நாட்டுப்புற இயலோடும் ஈடுபாடு கொண்டவன். தரமோ இல்லையோ 25-க்கு மேற்பட்ட நூல்களை எழுதியவன். இன்றைக்கும் ஒரு தீவிர வாசகன். நான் தொகுப்பாளனாகச் செயல் பட்டது எவ்வகையில் தவறாகும்?

'காய்த்த மரங்கள் கல்லடி படலாம்.' கனி மரங்களைக் காயப்படுத்தாதீர்கள்.

—**காவ்யா சண்முகசுந்தரம்**, பெங்களூர்.

www.padippakam.com

# ஒரே குரலில் பேசும் மும்மூர்த்திகள்.

டாக்டர் அ. ராமசாமி

'எழுத்து - வாசிப்பு - தமிழ்ச்சூழல்' என்ற ரவிக்குமாரின் கட்டுரையை எதிர்கொள்ள மும்மூர்த்திகளும் ஒரே இடத்தில் கூடிவிட்டார்கள் (சர்ச்சை: நியாயமா?). உந்துதல் பெற்றோ, மொழி பெயர்ப்பாகவோ படைக்கும் தொழில் தமிழவனுக்கு(பிரும்மன்). அச்சிட்டு, அட்டையிட்டு, ஆபரணங்களோடு- காத்தல் பொறுப்பு காவ்யா சண்முகசுந்தரத்துக்கு (திருமால்). 'இந்தச் சவலைப் பிள்ளைகளுக்கு இவ்வளவு அலட்டலா' என்று யாராவது சொல்லிவிட்டால், அவர்களைத் தலை காட்டவிடாமல் நிர்மூலம் செய்யும் பொறுப்பு நாகார்ஜுனனுக்கு (அமைப்பியல், குறியியல், பாலிம்ஸெஸ்ட் சாத்திரம் முதலான நெற்றிக்கண்கள் கொண்ட ருத்திரமூர்த்தி). பின் - நவீனத்துவ மும்மூர்த்திகள் வாழ்க வளமுடன்!

ரவிக்குமாரின் கட்டுரையை நான் இப்படி வாசித்துப் புரிந்து கொண்டேன்: ''சிறுபத்திரிகை வாசகர்கள் உள்ளிட்ட 'தமிழ் வாசகமனம் எதையும் சந்தேகப்படாதது; கேள்விக்குட்படுத்தாதது. தன் முன்னால் வைக்கப்படும் எல்லாவற்றையும் அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடியது.

இதைப் பயன்படுத்திக் கொண்டு தமிழ் அறிவுலகில் ஒரு சிலர் ஒரு விதமான மேலாண்மையை நிறுவிக் கொள்கின்றனர்'' நான் இப்படிப் புரிந்து கொண்டதை மும்மூர்த்திகள் வேறுவிதமாக அவர்களைக் குறிவைத்துத் தாக்குவதாக வாசித்துள்ளனர். இது ஒருவகை வாசிப்பு அரசியல்தான்.

ரவிக்குமாரின் கட்டுரை எழுப்பிய மையமான பிரச்சினைக்குப் பதில் சொல்லாமல், தங்களை மட்டும் பாதுகாத்துக் கொள்ளும் வளையங்களைப் போட்டுக் கொள்கிறார்களே, அதில்தான் ரவிக்குமார் குறிப்பிடும் 'அரசியல்' இருக்கிறது என நினைக்கிறேன்.

கட்சி அரசியலில் தலைவர்களின் 'பட்டங்கள்' பல்வேறு தளங்களில் அந்தக் கட்சிக்குப் பயன்படும். பட்டங்களை வியாக்யானம் செய்வது மூலம், பாமர ஜனங்களிடம் தொண்டர்கள் பெரியமனிதர்களாக உலா வருவார்கள். அதுபோல இலக்கிய உலகில், 'முதன் முதலில்', 'பிதாமகர்' முதலான பட்டங்கள் பயன்படுகின்றன. 'முதன் முதல்' நபர்களை 'மூலவர்'களாக மாற்றும் பணியைச் செய்பவர்களாக 'முன்னுரைப் பூசாரிகள்' விளங்குகிறார்கள். மூலவர்களின் நதிமூலம், ரிஷிமூலம் கண்டறியப் பட்டால், மூலவர்களாக்கிய முன்னுரைப் பூசாரிகளின் சாயமும் வெளுத்து விடும். பொறுத்துக் கொள்வார்களா பூசாரிகள்? தலையெடுக்க விடாமல் தடுத்துவிட மாட்டார்களா... 'நம்பிக்கை நட்சத்திரங்களை' முன்மொழிவதிலும் கூட இந்த அரசியல் இருக்கத்தான் செய்கிறது.

குருக்களும் (என்.எஸ்.ஜெகநாதன்) மூலவரும் (அசோகமித்திரன்) என்னை மூலவராக ஏற்றுக் கொண்டு விட்டார்கள். நீ யார் அதை ஒத்துக் கொள்ளாமல் கேள்வி கேட்க? பாமரனுக்குத் தேவை பக்திமட்டும்தான் என்பது தெரியாதா உனக்கு? உனக்கெல்லாம் படைப்பு நுட்பங்கள் புரியாது என்கிறது தமிழவனின் ஆணவக்குரல். மூலவர், நுட்பத்தையும் தாண்டி அதிநுட்பத்திற்குச் சென்று விட்டார். அதையெல்லாம் தெரியாமல், மூலவரைக் கொச்சைப் படுத்தி அனாச்சாரமான வார்த்தைகளால் பேசும் கட்டுரையை வெளியிட்டதே தவறு என்கிறது நாகார்ஜுனனின் அதிகாரக் குரல். இவர்களோடு சேர்ந்து தன்னையும் 'கனிமரமாக' முன்னிறுத்துகிறது சண்முகசுந்தரத்தின் இரக்கம் தேடும் குரல். ஒரே அரசியலின் வெவ்வேறு தொனிகள்தான் இந்தக்குரல்கள்.

03.11.94

www.padippakam.com

# தமிழவனின் 'மாஜிக்'கும் பாலிம் செஸ்டின் சரித்திரமும்

ரவிக்குமார்

1. தமிழவனின் புத்தகம் ஆங்கில நாவலின் மொழிபெயர்ப்பு என நான் எங்குமே குறிப்பிடவில்லை. மார்க்யெஸ் நாவலைப் படித்தவர்கள் தமிழவனின் மொழிநடையை அறிந்தவர்கள் யாருமே One hundred years of Solitude- ஐ மொழி பெயர்க்கும் ஆற்றல் தமிழவனுக்கு உண்டு என நினைக்க மாட்டார்கள். ''ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள்'' என்ற பிரதியின் அடையாளங்களை காப்ரியல் கார்ஷியா மார்க்யெஸின் One hundred years of Solitude - என்ற நாவலுக்குள் கண்டுபிடித்து சிலர் சுட்டிக் காட்டியதாக'' த்தான் நான் எழுதியிருந்தேன். நியாய மாகப் பார்த்தால் இதற்காக மார்க்யெஸ்தான் கோபப்பட வேண்டும்.

தமிழவன் தனது முன்னுரையில், ''மார்க்யொஸின் உந்துத லால்'' எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளது உண்மைதான். அதே வரி யில், ''நம்மைப் போன்ற ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்'' என்று மார்க் யெஸை அவர் குறிப்பிடுகிறார். மூன்றாம் உலக நாடுகள் என்ற வகைப்பாட்டுக்குள் கொலம்பியாவும் அடக்கப்படுவதால் தமிழவன் அப்படி சொல்லியிருக்கலாம். மற்றபடி தமிழ்ச் சமூகத்துக்கும் கொலம்பி யாவுக்கும் இடையில் என்னவிதமான ஒற்றுமைகள் உள்ளன என்பதைத் தமிழவன்தான் விளக்க வேண்டும். ஏனென்றால், ''லத்தீன் அமெரிக்கா என்று குறிப்பிடுவது கூட சரியில்லை. இது சோம்பேறித்தனத்தால் உண்டாக்கப்பட்ட லேபிள். லத்தீன் அமெரிக்கா என்று அழைக்கப்படும் 27 நாடுகளுக்கிடையே எண்ணற்ற முக்கியமான வேறுபாடுகள் உள்ளன'' என்று கூறுகிறார் ஆல்பெர்ட்டோ மாங்குவெல் என்ற எழுத்தாளர்.

2. உந்துதலால் எழுதுவதற்கும் தமிழவன் செய்திருப்பதற்கு மிடையே நிறைய வித்தியாசங்கள் உள்ளன. ''நான் ஒரு எழுத்தா ளனாக முடியும் என்பதை காஃப்காவின் மூலமாகவே கண்டு கொண் டேன்'' என்கிறார் மார்க்யெஸ். காஃப்காவின் ''மெட்டமார்பஸி ஸைப்'' படித்ததும் தனது பாட்டி சொன்ன கதைகள் நினைவுக்கு வந்தன என்கிறார் அவர். அவரது பாட்டி சொன்ன கதைகளின் பாணியில் அமைக்கப்பட்டதுதானாம் அவரது One hundrad years of Solitude- என்ற நாவல். மார்க்யெஸைத் தூண்டியது காஃப்கா என்ற போதிலும் மார்க்யெஸ் பின்பற்றியது தனது சொந்த மரபைத்தான். ஆனால் தமிழவன் செய்திருப்பது என்ன? அவர் தயாரித்தளித்த புஸ்தகத்தில் தமிழின் வாய்மொழி மரபு எங்கே வெளிப்படுகிறது? அவர் சித்திரித்துக் காட்டும் படிமங்களின் வேர்கள் எந்த சமூகத்தில் ஆழ்ந்திருக்கின்றன? தமிழவனது புஸ்தகத்தை மார்க்யெஸின் நாவலுக்கு இணையாக வைத்துப் பேசுவது எந்த விதத்தில் நியாயமாகும்?

பாகிஸ்தானின் வரலாறு பற்றிய SHAME என்ற தனது நாவல் ரியாலிஸ பாணியில் எழுதப்பட்டிருந்தால் அது தடை செய்யப்பட்டி ருக்கும் , குப்பைக் கூடையில் வீசப்பட்டிருக்கும், கொளுத்தப்பட்டி ருக்கும் அதனால்தான் மாஜிக்கல் ரியாலிசம் என்ற பாணியைக் கையாள வேண்டி வந்தது என்கிறார் சல்மான்ருஷ்டி. இப்படியான காரண மாவது தமிழவன் புஸ்தகத்துக்குப் பொருந்துமா?

தமிழவனது புஸ்தகத்தினுடைய பூர்வசரித்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டியது இந்த இடத்தில் அவசியமாகிறது. முதலாவது என்ற தலைப்பில் ரியாலிஸ பாணி நாவலாக எழுதப்பட்டது அது.

படிப்பகம்

www.padippakam.com

அச்சிட்டு வெளிவரும் போதோ ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் என்ற புஸ்தகமாக உருமாறிவிட்டது. இடையில் நடந்த மாஜிக்தான் என்ன? வேறொன்றுமில்லை, மார்க்யெஸின் One hundred years of Solitude ஐ அவர் படிக்க நேர்ந்ததுதான் அது. ரியாலிச பாணியில் தான் எழுதி வைத்திருந்த நாவலின் மீது மார்க்யெஸின் நாவலிலி ருந்து நகல் பண்ணிய சமாச்சாரங்களைத் தெளித்து போஸ்ட் மாடர் னிஸப் புது வாழ்வு கொடுத்து விட்டார் தமிழவன். (இந்த மாந்திரீக நிகழ்வுக்கு உடுக்கையடிக்கத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்தான் நாகார் ஜுனன்). ''தமிழ் மரபிலிருந்து எழுந்துள்ள ஒரு புதுக்கிளை'' என சுய மோகத்தின் கிறுகிறுப்பில் தமிழவனால் பாராட்டிக் கொள்ளப்பட்ட அந்த வஸ்து — கிளையுமல்ல, இலையுமல்ல, சருகு கூட அல்ல என்பதைத் தமிழ் வாசகர்கள் கண்டு கொண்டதால் தான் சல்மான் ருஷ்டிக்கு உள்ளது போன்ற அரசாங்க அச்சுறுத்தல்கள் எதுவும் இல்லா மலேயே, அது குப்பைக் கூடைக்குள் போய் விழுந்து விட்டது.

3. மார்க்யெஸ் நாவலின் அடையாளங்களை தனது புத்தகத்தில் யாரும் கண்டுபிடிக்க வில்லை, அப்படிச் சொல்வது ''அபாண்டம்'' என்கிறார் தமிழவன். அவரது புத்தகம் பற்றி எழுதப்பட்ட விமர்சனங் களில் முக்கியமானது 'பரிமாணம்' இதழில் (ஏப்ரல்-ஜூன் 1986) ராஜ்கௌதமன் எழுதிய விமர்சனமாகும். தனக்கு, போஸ்ட் கார்டில் எழுதப்பட்ட விமர்சனங்களுக்குக் கூட மாய்ந்து மாய்ந்து பதில் சொல்லி அதை ஒரு சிறுநூலாகப் போட்டு ''மேலும்'' இதழின் இலவச இணைப் பாக விநியோகித்த தமிழவன் ராஜ்கௌதமன் விமர்சனம் குறித்து அதில் வாயே திறக்காதது ஏன்? ஏனென்றால் அந்த விமர்சனத்தில் தான் மார்க்யெஸின் One hundred years of Solitude - நாவலுடன் தமிழவனின் புத்தகத்தை ஒப்பிட்டு '' மார்க்யெஸ் - சாதனையின் சிகரம், தமிழவன் அவர் பாணியைத் தமிழுக்கு அறிமுகம் செய்து வைக்கிற கற்றுக்குட்டி''என்று ராஜ்கௌதமன் எழுதியுள்ளார். அது மட்டுமின்றி ''எதார்த்த பாணி தொல்கதைப்பாணி நடைகளின் கூர்களைத் தமிழவன் இஷ்டப்படி தீட்டித் தீட்டி மழுங்க வைத்திருப்பதாகவே தெரிகிறது'' எனக் குறிப்பிட்டு ''ஏற்கனவே புழக்கத்திலுள்ள ஒரு எழுத்துப் பிரயோ கத்தின் ஆற்றாமையைத் தமிழவனின் பிரயோகம் போக்கிவிடவில்லை... தமிழவனின் எழுத்துப் பிரயோகம் எழுத்துப் பிரயோகத்திற்காகவே அமைந்து விட்ட துர்பாக்கியம் நேர்ந்து விட்டது'' எனவும் எழுதி யுள்ளார் ராஜ்கௌதமன். அவரது விமர்சனம் பற்றி தமிழவன் மௌனம் காக்கும் ரகசியம் இப்போது புரிந்திருக்கும்.

One hundred years of Solitude நாவலுடன் ஒப்பிட்டு எழுதி அதன் வாயிலாக, தமிழவன் புத்தகத்தில் கையாளப்பட்டிருப்பது மார்க்யெஸ் நாவலின் நகல் சமாச்சாரங்கள்தான் என்பதை மறைமு கமாகச் சுட்டிக் காட்டியவர் ராஜ்கௌதமன் தான். நான் எனது கட்டுரையில் குறிப்பிட்டிருப்பதும் பரிமாணத்தில் வந்த அவரின் கட்டு ரையைத்தான். இது எந்த விதத்தில் அபாண்டமாகும் என்பதை வாசகர் களே தீர்மானிக்கட்டும்.

4. எந்தவொரு பிரதியும் அதை ஆக்கிய ஆசிரியரது நோக்கத்தின்படியே வாசகரால் புரிந்து கொள்ளப் படுவதில்லை. மாறாக, வாசிப்பவர்தான் தனது சூழலைப் பொருத்து தனக்கான அர்த்தத்தை உருவாக்கி அதன் மூலம் அந்தப் பிரதியைத் தனது நோக்கில் கட்டமைத்துக் கொள்கிறார் என்பதாக வாசிப்பு செயல் பாட்டை நவீன விமர்சகர்கள் விளக்குகிறார்கள். இதையொட்டி அர்த்தப் படுத்துதலில் செயல்படும் பிறகாரணகளின் பங்கு பற்றிய வாதப் பிரதி வாதங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இப்படிப் பார்த்தால் மார்க்யெஸின் நாவலின் அர்த்தம் வாசகரால் கட்டமைக்கப் படுகிறது எனக் கூறலாம்.

ஆனால், '' மார்க்யெஸின் நாவலைப் படிப்பவர் எவரும் தனது நாவலை எழுதிப் பார்ப்பது தவிர்க்க முடியாதது'' என்ற தமிழவனது கூற்றின் பொருள் இத்தகையதா என்று பார்த்தால் இல்லையென்று தான் நாம் பதில் சொல்ல நேர்கிறது. ஏனென்றால் மார்க்யெஸின் நாவலை வாசித்த தமிழவன் என்ற வாசகர் தனக்கான பிரதியைக் கட்டமைத்துக் கொண்டதோடு நிறுத்தவில்லை, அப்படிக் கட்டமைத்த பிரதியை எழுதி அச்சிட்டு விற்கவும் செய்கிறார். அந்த காரியத்தை நியாயப்படுத்தும் விதமாகவே மேற்குறிப்பிட்ட அவரது கூற்று செயல்படுகிறது. ஆக, ஆழ்ந்த அர்த்தம் கொண்ட கருத்தாக்கங்களைக் கொச்சைப் படுத்துவதும் அப்படிக் கொச்சைப் படுத்துவதன் மூலம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிப்பதும் தமிழவன் தானே தவிர நான் இல்லை யென்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மொழி பெயர்ப்பு பற்றிய போர்ஹேவின் வார்த்தைகளையும் கொச்சையாக எடுத்தாள்வது தமிழவன்தானே யொழிய நான் அல்ல என்பது அவரது அந்த சிறு நூலைப் படிப்பவர்களுக்குப் புரிந்து விடும்.

5. என்.எஸ்.ஜெகந்நாதனையும், அசோகமித்திரனையும் துணைக்கு அழைத்துப் பார்க்கிறார் தமிழவன். தனது வேட்கையற்ற எழுத்தை, கற்பனா வறட்சியை மறைக்க ''மாஜிக்கல் ரியாலிஸ சொக்குப் பொடி'' யைத் தூவி விட்டது போல மேற்சொன்னவர்களின் பெயர்களையும் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார். என்ன ஒரு பரிதாபமான நிலை!

ஆனால் என்.எஸ். ஜெகந்நாதன் நாவலின் கரு பற்றிக் கூறியதை மட்டும் எடுத்துக்காட்டுகிற தமிழவன், நாவல் பற்றிக் கூறியதைத் தந்திரமாகத் தவிர்த்து விட்டார்... '' இந்தக் கோட்பாடுகள் தமிழவனின் இரு நாவல்களில் செயல்படுத்தப்பட்டிருக்கும் விதம் திருப்தியளிக்கக் கூடியதாக இல்லை... இரண்டுமே மாஜிக்கல் ரியாலிஸ அச்சில் வார்க்கப்பட்டவையாகத் தங்களைக் கூறிக் கொள்கின்றன. மேலோட்டமாகச் சொன்னால் BIZARRE READING'' என்பதுதான் என்.எஸ். ஜே. எழுதியிருப்பது. அவர் தன்னைப் பாராட்டுகிறார் என்கிற தொனியில் தமிழவன் எழுதியிருப்பதைப் பார்த்தால் அவருக்கு ஆங்கிலம் படிக்கத் தெரியுமா என்று கூட ஐயமாயிருக்கிறது.

6. நாகார்ஜுனன் சொல்லும் Palimpsest History - க்கு வருவோம். இந்தத் தலைப்பில் கிறிஸ்டின் ப்ரூக்ரோஸ் என்ற பெண் எழுத்தாளர் எழுதிய கட்டுரை Interpretation and Overinterpretation என்ற நூலில் (Cambridge University Press - 1992) உள்ளது. Palimpsest History என்பதை சல்மான்ருஷ்டியின் SHAME என்ற நாவலில் தெரிவிக்கப்பட்டிருந்த ஒரு கருத்திலிருந்து எடுத்ததாக ரோஸ் குறிப்பிடுகிறார். '' Palimpsest History என்பது ஒரு மாற்று வரலாறு'' என்கிறார் அவர். '' மாஜிக் ரியாலிஸம் '' என்று வேறு சிலரால் அழைக்கப் படுவதுதான் ப்ரூக் ரோஸால் '' பாலிம்செஸ்ட் ஹிஸ்டரி '' என அழைக்கப்படுகிறது. அதனை ஐந்து வகைகளாகப் பிரிக்கும் ரோஸ் அவற்றுக்கான உதாரணங்களாக மெக்ஸிகோவைச் சேர்ந்த கார்லோஸ் ஃபுயன்டஸ்; யூகோஸ்லேவியாவின் மிலோரட் பாவிக்; மார்க்யெஸ், ருஷ்டி, உம்பர்ட்டோ ஈக்கோ, தாமஸ் பின்ச்சோன் முதலானவர்களது படைப்புகளைக் குறிப்பிடுகிறார். அவரது வகைப்பாட்டின்படி ரியாலிசபாணி வரலாற்று நாவல்களும் பாலிம்செஸ்ட் ஹிஸ்டரிக்குள் அடங்கும். அதாவது, பிரபஞ்சனின்''வானம் வசப்படும்'', ''மானுடம் வெல்லும்'' ஆகியனவும் பாலிம்செஸ்ட் ஹிஸ்டரிகள் தான்...

பாலிம்செஸ்ட் ஹிஸ்டரி என்ற சிகரம் வரை எங்கள் விவாதம் வந்துவிட்டது. அவனோ அற்பன் அடிவாரத்தில் நின்று கொண்டு கத்துகிறான். நீங்கள் அவனை தவிர்த்திருக்க வேண்டாமா என்கிற ரீதியில்

www.padippakam.com

பேசுகிற நாகார்ஜூனன் குறிப்பிடுவது தமிழவனின் இரண்டாவது புத்தகமான "சரித்திரத்தில் படிந்த நிழல்கள்" என்பதில் எழுதப்பட்டுள்ள பின்னுரையைத்தான் என நினைக்கிறேன். அந்தப் பின்னுரையின் சரித்திரம் ஒரு பெரிய ''கோராமை.''

அந்தப் பின்னுரையின் அரைவேக்காட்டுத் தனத்துக்கு ஒரேயொரு உதாரணம் தருகிறேன் : ''கிரிஸ்டீன் புருக் ரோஸின் கட்டுரையில் பல்வேறு விதமான பாலிம்ஸெஸ்ட் சரித்திர வகைகள் இருக்கின்றன. அவற்றை அவர் நான்காக முன் வைக்கிறார்'' என்கிறது அந்தப் பின்னுரை. அதன் கீழ் நான்கு வகைகள் விளக்கவும் பட்டுள்ளன. ஆனால் கொடுமை என்னவென்றால் கிறிஸ்டின் ப்ருக்ரோஸ் வகைப்படுத்தியிருப்பது நான்கு பிரிவுகளாக அல்ல. ஐந்து பிரிவுகளாக. 1, 2, 3, 4, என இலக்கமிட்டு வகைப்படுத்திவிட்டு அடுத்தப் பத்தியில் Fifthly and lastly என ஆரம்பித்து இன்னொரு வகையை விளக்கி அதற்கான உதாரணங்களாக Terra Nostra, The Satanic Verses, The Dictionary of Khazars ஆகிய நாவல்களைக் கூறி இந்த வகைதான் மிகவும் முக்கியத்துவம் உள்ளதாக, காத்திரமானதாக, படிக்க எளிதானதாக இருக்கிறது எனவும் ரோஸ் குறிப்பிடுகிறார். இது தமிழவன் புத்தகத்துக்குப் பின்னுரை எழுதிய சண்முகத்தின் கண்களில் படாமல் போன மாயமென்ன? இலக்கம் போடாததாலா? அவர்தான் தவறிவிட்டார். தமிழவன் என்கிற டாக்டர் கார்லோஸ் கூடவா கவனிக்கவில்லை? நான் கொச்சைப்படுத்தி எழுதுகிறேன் எனக்குற்றம்சாட்டி என்னுடைய கட்டுரையை தவிர்த்திருக்க வேண்டும். அதாவது இந்தமாதிரி ஆட்களை எழுதவே அனுமதிக்கக் கூடாது என்று கூறுகிறாரே நாகார்ஜூனன் அவர் கண்ணிலும் இத்தத் தவறு தென்படாமல் போனதென்ன? இப்படியிருக்கிறது இவர்கள் படித்ததன் லட்சணம். இவர்களது அறிவு செயல்படாமல் போனதென்ன? இதற்கான பதிலை அம்பேத்கர் கூறிவிட்டுப் போயிருக்கிறார்: ''ஒருவருடைய சுய நலத்தோடு முரண்படாத வரையில் அவரிடம் அறிவு வேலை செய்யும். எப்போது சுய நலத்தோடு அது முரண்படுகிறதோ அப்போது அறிவு தோற்றுவிடுகிறது''.

ஃ ஃ ஃ

காவ்யா சண்முகசுந்தரம் நான் எனது கட்டுரையில் கூறிய எதையும் மறுக்கவில்லை. 25-க்கு மேற்பட்ட புத்தகங்கள் எழுதியிருப்பதாகக் கூறுகிறார். தமிழ்வாணன் வாழ்ந்து சென்ற கலாச்சாரம் நம்முடையது. சண்முகசுந்தரம் தமிழ்வாணன் இடத்தை நிரப்பட்டும். வாழ்க அவரது எழுத்துப்பணி. கனிமரம் என்று தன்னை குறிப்பிட்டு எழுதியுள்ளார். பெங்களூரை ''கார்டன் சிட்டி'' என அழைக்கக் கேட்டிருக்கிறேன். சண்முகசுந்தரம் போன்றவர்கள் அங்கு நிறைந்திருப்பதால்தான் அப்படி அழைக்கிறார்கள் போலும்.

ஃ ஃ ஃ

மாஜிக்கல் ரியாலிஸத்தை நவீன இலக்கிய வடிவத்தில் சரியாகக் கையாண்டிருப்பவரென புதுமைப்பித்தனைக் கூறலாம். 'உபதேசம்' என்ற அவரது அதிகம் கவனிக்கப்படாத சிறுகதையில் இந்தக்கூறு சிறப்பாக வெளிப்பட்டுள்ளது. நமது மரபிலிருந்து மாஜிக்கல் ரியாலிஸ பாணி எப்படி வெளிப்படும் என்பதற்கான உதாரணங்களில் ஒன்றாக இருக்கிறது அந்தச் சிறுகதை.

ஃ ஃ ஃ

பதில் எழுதிய மூவருமே வாசிப்பு குறித்து நான் எழுதியவற்றைப் பற்றி எதுவுமே பேசாதது வியப்பளிக்கிறது. அப்படியிருக்கிறது அவர்கள் வாசிப்பு.

www.padippakam.com

# பின் நவீனத்துவமும், தலித் விமர்சனமும்

## அழகரசன்

தமிழ்ச் சூழலில் 'வாசிப்பு' என்பது மந்தத் தன்மையோடு கூடிய ஒரு செயல்பாடாக மட்டுமே இருப்பதை தினமணி சுடரில் ரவிக்குமாரின் கட்டுரை முன்வைத்தது. அதற்கு எதிர் வினையாக அல்லாமல் ஒரு வித கதறலுடன் தமிழவன், நாகார்ஜுனன், சண்முகசுந்தரம் ஆகியோரின் கடிதங்கள் தினமணி ஆசிரியரிடம் நியாயம் கேட்டிருந்தன.

இவற்றுக்கிடையில் மேஜிக்ரியாலிசம் பற்றியோ, மௌனத் திருட்டின் பரிமாணங்கள் பற்றியோ, மொழிபெயர்ப்பு பற்றிய கோட்பாட்டு அளவிலான விளக்கங்கள் பற்றியோ, தொகுப்பாளரின் பணிகள் பற்றியோ நேரடியான விவாதங்களுக்குள் இறங்காமல், இவற்றுக்குப் பின்புலத்தில் இயங்குகின்ற அரசியல் செயல்பாடுகளை நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறது.

பொதுவாக இன்றைய தமிழ் விமர்சன சூழலில் இரண்டு போக்குகள் தொனிக்கின்றன:

1. ஒருவர் முன்வைக்கின்ற பிரச்சனையை அணுகுவதற்குப் பதிலாக, அதை யார் முன்வைக்கிறார்களோ அவர்களைத் தனிப்பட்ட விதத்தில் விமர்சிப்பதாகவோ; அல்லது பிரச்சனைக்குப் பின்புலத்தில் இருக்கின்ற முரண்பாட்டை மட்டும் சீண்டிவிடுகின்ற செயலாகவோ இருப்பது முதல் போக்கு.

2. பிதாமகர்கள், தொண்டர்படைகள் மற்றும் நண்பர்கள் X வைரிகள் என்று பிரதிக்கு அப்பாற்பட்ட உந்துதல்களால் பாதிக்கப்பட்ட வகையில் பேசப்படுபவை. இது இரண்டாவது போக்கு.

இதனால்தான், சாதாரணமாக முன்வைக்கப்படும் கருத்துக்களைக்கூட விளங்கிக் கொள்ள முடியாமல் பல முன்னோடி விமர்சகர்கள் விழித்துக் கொண்டிருக்கிறார்கள். (அல்லது, அப்படி நடிக்கவேண்டிய கட்டாயத்தினுள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள்)

ரவிக்குமாரின் கட்டுரையில், முக்கிய கருத்துக்களாக a) வாசிப்புக்குத் தேவையான அதிகாரமும், b) பிரதிமையப்படுத்துகின்ற உண்மையின்மீது சந்தேகத்தை உண்டாக்க வேண்டிய அவசியமும் வலியுறுத்தப்பட்டன. ஆனால், தமிழவன், நாகார்ஜுனன், சண்முகசுந்தரம் மூவரும் ஒட்டுமொத்தமாகக் கண்ணைக் கசக்கிக் கொண்டு தத்தம் வழியில் புலம்பியிருக்கிறார்கள். இங்கு வாசிப்பு பற்றியும், பிரதி மையப்படுத்துகின்ற உண்மை பற்றியும் சிலாகித்துப் பேசவேண்டிய அவசியம் ரவிக்குமாருக்கு ஏன் ஏற்பட்டது என்று பார்ப்பதோடு, மேற்கூறிய மூவரின் பதில்களும் எவ்விதம் எழுப்பப்பட்ட பிரச்சனைகளைத் திசைதிருப்பும் விதத்தில் இருக்கின்றன என்பதனையும் நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

ரவிக்குமார் இந்த இரண்டு பிரச்சனைகளையும் தலித்(விமர்சன) கண்ணோட்டத்தில் முன்வைக்க முயன்றுள்ளார். இங்கு, தலித் விமர்சகர்களின் செயல்பாடுகள் எப்படி 'மற்றவர்களால் அணுகப் படுகின்றன என்பதைப் பார்த்தால் மேற்கூறிய பிரச்சனைகளைப் பற்றி நாம் இன்னும் கொஞ்சம் தெளிவு பெறலாம்.

தலித் சூழலைப் பற்றிப் பரவலாக நிலவி வருகின்ற கீழ்க்கண்ட கருத்துக்களே இந்த குழப்பங்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன. அதாவது- 1) தலித் எழுத்துக்கள் (விமர்சனங்கள் உட்பட) ஒரு தறிகெட்டுப்போன, சமுதாய ஒழுங்கைச் சீரழிக்க முயல்கின்ற செயல்பாடாக மட்டுமே புரிந்து கொள்ளப் படுகின்றன. இதுமட்டுமின்றி 2) தலித் விமர்சனக் கண்ணோட்டத்துக்கு எத்தவொரு முறையான, விஞ்ஞான பூர்வ, தத்துவார்த்த பின்னணியும் இல்லை என்றும் நம்பப்படுகிறது.

www.padippakam.com

ஆனால், உண்மையில் பார்க்கப்போனால் தமிழ்ச்சூழலில் தலித் கண்ணோட்டம் ஒரு விமர்சனக்கண்ணோட்டமாக உருப்பெற்ற நிகழ்வு, உலக அளவில் (பின் நவீனத்துவ வாதிகளால் கோட்பாட்டளவில் பேசப் படும்) விளிம்புகளை மையப்படுத்த முயல்கின்ற கலாச்சாரப் போக்கு களோடு நெருங்கிய தொடர்புடையதாகவே இருக்கின்றது. குறிப்பிட்டுச் சொன்னால், தலித் கண்ணோட்டம், அமைப்பியல் ரீதியிலான 'நான்' மற்றும் 'நீ' என்ற இருமை எதிர்வை உடைக்கின்ற செயல்பாடாகவே இருக்கின்றது. மேலும், வாழ்க்கைக்கும் கலைக்கும் இடையிலான இருமை எதிர்வைக் கடக்க வாசகன் என்கிற நிலையில் தத்தம் வாழ் வோடு இயைந்த நிலையில் பிரதியில் பங்கேற்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் உள்ளது. இதுமட்டுமின்றி, அன்றாட வாழ்வின் (கலாச்சார) கொடூரங்களிலிருந்து விலகிய நிலையில் செயல்படுகின்ற படைப்பாளன் தன்னுள் கொண்டிருக்க வேண்டிய குற்ற உணர்வின் தேவையையும்; அன்றாட வாழ்வின் யதார்த்தங்களில் மூழ்கடிக்கப்பட்ட வாசகன் பிரதியின் பன்முகத்தன்மையை உள்வாங்க முடியாமல் போவதை ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதாகவும் தலித் கண்ணோட்டம் இருக்கிறது. இங்கு, உதாரணங்களாக **ஊடகம்** இரண்டாவது இதழில் வெளிவந்த யர்மோலாவுடனான உரையா டலையும், ராஜ்கௌதமனின் **தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு** என்ற தலைப்பிலான நூலையும் குறிப்பிடலாம்.

இதனையொட்டியே, இதன் ஒரு பரிமாணமாகவே படைப் பாளிXவாசகன் என்ற இருமை எதிர்வை ஒரு பிரச்சனையாக ரவிக்குமார் தனது (சுடர்) கட்டுரையில் எழுப்பியிருக்கிறார் எனத் தோன்றுகிறது. மேலே உதாரணங்களாக சுட்டப்பட்ட இரண்டு பிரதிகளும் வாசிப்பு பற்றி முன்வைத்த கேள்விகளுக்குப் பதில் கூறாமல் மௌனமாக இருந்த தமிழவன் குழுவினர், ரவிக்குமார் கட்டுரைக்குப் பதிலளிக்க முன்வந்திருப் பதற்குக் காரணம் அது அவர்கள் கட்டமைத்து வரும் விமர்சனபூர்வ 'நான்' என்பதன் அழிவைப் பற்றிய விஷயமாக இருக்கிறது என்பதனால்தானோ!

இதை மறைக்க (மறுக்க) ஒரு எளிதான சூத்திரத்தையும் அவர் கள்போட முயல்கிறார்களே! அதாவது— தங்களை நிறுவனமயமாக்கத் துக்குள் பணியாற்றும் பொறுப்பான விமர்சகர்களென்றும், தலித் விமர்ச கர்களை அரசியல் ஈடுபாடு மட்டும் உள்ளவர்களென்றும் ஒரு எதிர்வைக் கட்ட முயல்கிறார்கள். இதில்தான் மிகப்பெரிய மோசடியே இருக்கிறது. அதாவது, இவர்கள் மேற்கோள் காட்டுகின்ற பின்நவீனத்துவ வாதிக ளின் அரசியல் செயல்பாடுகளை மௌனமாக்குவதோடு, தமக்கு வசதி யான ஒரு கொச்சையான அரசியல் செயல்பாட்டினை— தாங்கள் ஈடுபட் டதை—ஒரு சில இடங்களில் தொண்டர்கள் வழியாகவும், சில சமயம் புலம்பல்களாகவும் வெளிப்படுத்திச் சாதிக்க முயன்று கொண்டிருக்கிறார்கள் இதற்குப் பக்கபலமாக லெவிஸ்ட்ராஸை இழுத்து, ''அவர் நிறுவனத்தில் தானே பங்காற்றினார்'' என்று கூறுவதன் மூலம் தம்மை உயர்த்திப் பிடித்துக் காட்டுகிறார்கள்.

இத்தனை விளக்கங்கள் தேவைதானா? இவையெல்லாம் இவர் களுக்குத் தெரியாதா? என்ற கேள்வி எழலாம். இவர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும், நிறப்பிரிகையின் கூட்டுவிவாதங்களில் பங்கேற்றிருக் கிறார்கள். நிறப்பிரிகையின் விவாதங்களில் சோஷலிசக் கட்டுமானம், தேசிய இனப்பிரச்சனை, சாதிப்பிரச்சனை, பெண்ணியம், தகவல் தொடர்பு, பெரியாரியம் போன்ற விவாதங்களின் தொடர்ச்சியாக தலித் அரசியல்(விமர்சன) செயற்பாடுகள் வந்திருப்பது ஒரு சாதாரண அரசியல் செயல்பாடு என ஒதுக்கிவிடக் கூடியதில்லை. இது நமக்கு விளங்குகிறது. பிறப்பாலேயே கலாச்சாரத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட(படும்) தீண்டப் படாதவர்களின் பிரச்சனை, இப்படித்தான் ஒரு விஸ்தாரமான அரசியல் கலாச்சார தத்துவ சூழலின் பின்னணியில் இன்று விவாதிக்கப்படுகிறது. பெண்நிலை வாதங்கள்வழி புதிய பலம் பெற்றுப் புதியதோர் உடல் ரீதியான 'தலித்', அடையாளத்தை முன்னிறுத்துகிறது.

படிப்பகம்

''நிறப்பிரிகை'' விவாதங்களை நன்கறிந்த இந்த (பின்) நவீனத்துவ, அமைப்பியல் வாதிகளுக்கு இவையாவும் தெரிந்திருக்கலாம்தான். ஆனால், அதன் வீரியத்தைக் கண்டு கலவரப் பட்டதால்தான் இப்படித் தலித் அரசியலைக் கவனமாக இருட்டடிப்புச் செய்யும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். விமர்சனம் (வாசிப்பு) என்பதே ஒரு சுதந்திரமான செயல்பாடெனக் கோட்பாட்டளவில் ஒப்புக்கொள்ளும் இவர்கள், தங்களை விமர்சிக்காதவரைதான் அவை செல்லுபடியாகும் என்று கூறுகிறார்கள்.

இந்த நிலையில், நாம் இந்தப் பிரச்சனையில் இவர்களது எழுத்துக்களை எவ்வாறு மதிப்பிடுவது? நகைத்து விட்டுப் போகவேண்டியது தான். நகைப்பும் கூட பின் நவீனத்துவத்தில் ஒரு முக்கிய விமர்சன சக்தியாக கருதப் படுவது நாம் அனைவரும் அறிந்ததுதானில்லையா?

● ● ●

# மாயம் நிகழ்த்தும் மந்திர தந்திரங்களும் விதிவசப்பட்ட நிலையும்

*E.M. சியோரான்*

மாயமிகு நுண்ணுணர்வு நிறைந்த மனிதர்களின் பரவசத்தை, ஆனந்தத்தை கற்பனை செய்வது கடினமானதாக இருக்கிறது எனக்கு; அந்தமனிதர்கள், அனைத்தும் தங்கள் அதிகாரத்திற்குள், சக்திக்குள் இருப்பதாக உணர்கிறார்கள்; எவையும் அவர்களுக்குத் தடைக்கற்களாக இருப்பதில்லை. பரவசத்தை, ஆனந்தத்தை நோக்கி மட்டுமே இட்டுச் செல்கிறது மாயமிகு நுண்ணுணர்வு. திரும்புதல் சாத்தியமற்ற, விதிவசப்பட்ட இருத்தலைக் குறித்து ஒன்றும் அறியாததாக நிற்கிறது மாயமிகு நுண்ணுணர்வு. எதையும் செய்யமுடியும் என்று உணர்வது, ஒப்பற்றதை, இறுதியானதை, நித்தியமானதை உள்ளங்கையில் கொள்ளமுடியும் என்பது, தன் (உன்) குதூகலத்தை உலகத்தின் குதூகலமாக கொள்வது, தன்னையே (உன்னையே) உலகமாக உணர்வது—உலகத்தின் இருதயம் தன்னுள் (உன்னுள்) தீவிரத்துடன், பதற்றத்துடன் துடிப்பதாக உணர்வது— கற்பனை செய்யமுடியாத ஒரு பரவசத்தின் ஆனந்தத்தின் உள்ளடக்கக் கூறுகள் இவை. மாயமிகு நுண்ணுணர்வுடையவர்களுக்கு மட்டுமே உரித்தானவை இவை. மாயம் நிகழ்த்தும் மந்திர தந்திரங்கள், துன்பம் தரும் குறைபாடுகளை நோய்களை அறியாதவையாக இருக்கின்றன. அப்படியே அவை அவற்றைப்பற்றி அறிந்திருந்தாலும் அந்தக் குறைபாடுகள், நோய்கள் என்றும் குணப்படுத்தமுடியாதவையாக, தீர்க்கமுடியாதவையாக இருப்பதில்லை. மாயமந்திரதந்திரம் மிகுந்த நம்பிக்கை அனைத்திலும் சமநிலைகளைக் கண்டுபிடிக்கிறது. மாயம நிகழ்த்தும் மந்திரதந்திரங்கள் வாழ்வின் எதிர்மறையான தீங்கு செறிந்த அரக்கத்தனமான சாரத்தை மறுக்கின்றன. மாயமிகு நுண்ணுணர்வைக் கொண்டிருக்கும் ஒருவனால், வலி, துக்கம் நிறைந்த பரிதாபநிலை, விதி, மரணம் ஆகியவற்றின் தீவிரமான உச்சங்களைப் புரிந்துகொள்ள முடியாது. மாயமந்திரதந்தரங்கள் உருவாக்கும் பிரமையும்உருவெளித் தோற்றங்களும் திரும்புதலற்ற தன்மையை மறுதலிக்கின்றன. மரணத்தின் தவிர்க்கமுடியாத தன்மையை, அதன் பிரபஞ்சரீதியிலான பொதுமையை அவை மறுக்கின்றன. அகவயப்பட்ட நிலையில்

www.padippakam.com

மாயம் நிகழ்த்தும் மந்திர தந்திரங்கள் முக்கியத்துவம் நிறைந்தவை ஏனென்றால் அவை உற்சாகமும் குதூகலமும் நிரம்பிய ஒரு கொண்டாட் டத்திற்கு இட்டுச் செல்கின்றன. மாயம் நிகழ்த்தும் மந்திர தந்திரங் களால் வழி நடத்தப்படும் அந்தக் கொண்டாட்டத்தில் இறக்கப்போவதே இல்லை யென்பது போல வாழ்கிறான் மனிதன். மரணத்திலிருந்து, மர ணத்தைக் குறித்து எழும் அகவயப்பட்ட பிரக்ஞை, இதைத்தவிர வேறென்ன இருக்கிறது மரணத்தில்? இப்பிரக்ஞை இல்லாதவர்களுக்கு மரணம் தேவையற்ற ஒன்று, மரணத்ினூடாக அவர்கள் வெறுமையி னுள் வீழ்ந்து கொண்டிருப்பார்கள் மரணத்தை தொடர்ந்து அவதானிப் பதன்மூலம் இந்த அகபட்ட பிரக்ஞையின், தீவிரகட்டத்தை உச்சக்கட் டத்தை அடையமுடியும்.

விதிவசப்பட்ட நிலையை பிரக்ஞை பூர்வமாக உணர்ந்தவர்கள் முடிவற்ற விதத்தில் மேலும் சிக்கலானவர்கள். தீர்க்க முடியாதவையும் திரும்புதல் சாத்தியமற்ற நிலையும் நிஜமானதாக யதார்த்தமானதாக இருக்கின்றன அவர்களுக்கு. முயற்சி என்பதை வீணானதாக, திரும்ப நினைவு கூர்ந்து வருந்துவதென்பதை சாத்தியமற்றதாக உணர்கிறார்கள் அவர்கள். விதிவசப்பட்ட நிலையின் குறியீட்டின் கீழ்விரிகிறது இன்றி யமையாத, சாராம்சமான யதார்த்தம். தனக்கென விதிக்கப்பட்டிருக்கும் எல்லைகளை மீறமுடியாத கையாலாகாத்தனத்துடன் கிடக்கிறது வாழ்க்கை. பொருட்படுத்த வேண்டாதவற்றின் முனபுபயனுள்ளவையாக இருக்கின்றன மாயம் நிகழ்த்தும் மந்திர தந்திரங்கள். ஆனால் இயல் கடந்த யதார்த்தத்தை எதிர்கொள்ளும் போது சக்தி யற்றுப் போகின்றன அவை. பெரும்பாலான கணங்களில் மௌனத்தை வேண்டி நிற்கிறது இயல் கடந்த யதார்த்தம் அம்மௌனம் இயலாது நிற்கிறது மாயமிகு நுண்ணுணர்வு.

விதிவசப்பட்ட நிலையைக் குறித்த கூர்மையான, தீவிரமான பிரக்ஞையுடன் வாழ்வது, வாழ்வின் பிரச்சினைகளின் முன் தனது கையா லாகாத்தனத்தை உணர்வது [இருத்தலின் அவலத்தில் தன்னை (உன் னை) தீவிரமாக உட்படுத்திக் கொள்ளாத நிலையில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாதவை இவை] என்பது வாழ்வின் முதன்மையான அடிப் படையான கேள்வியுடன் நேரடியாக போராடுவது: அக்கேள்வி அணுக முடியாத, அறியமுயுடியாத முடிவற்ற நிலையைச் சார்ந்தது.

ருமானிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில்
ILINCA ZARIFOPOL-JOHNSTON

ஆங்கிலம் வழி தமிழில்: **M. கண்ணன்**
ON THE HEIGHTS OF DESPAIR
— E.M. CIORAN
The University of Chicago Press 1992

**எமில் M. சியோரான்** (1911—) ருமேனியாவில் பிறந்தவர் 1937 முதல் பாரீஸில் வாழ்கிறார். கீர்க்கேகார்ட், நீட்ஷே, விட்ஜென்ஸ்டைன் மரபில் வரும் முக்கியமான சிந்தனையாளர் என்று சூஸன் ஸொன்ட்டாகால் குறிக்கப்பட்டவர்.

www.padippakam.com

படிப்பகம்

இன்று தமிழ்ச் சூழலில்
நடைபெறும் விவாதங்கள் யாவுமே ஏதோ ஒரு விதத்தில் தலித் பிரச்சினையோடு தொடர்பு கொண்டுள்ளன. தற்போது. பின் நவீனத்துவம் என்ற பெயரில் முன் வைக்கப்படும் கருத்துக்கள், ஒருவகையில் தலித் பிரச்சினையில் இருந்து தப்பிக்க செய்யும் முயற்சியாகவும், இன்னொரு வகையில் சாதீயக் கருத்தியல் வழங்கியுள்ள அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான நடவடிக்கையாகவும் செயல்படுகின்றன. இப்படியானவர்கள் பேசுவது பின் நவீனத்துவம் இல்லை,எதிர் நவீனத்துவம் என்பதை இந்த நூலில் உள்ள கட்டுரைகள் நிறுவுகின்றன.

பின் நவீனத்துவத்திற்கும் தலித்தியத்துக்கும் உள்ள உறவும் கூட இந்தக் கட்டுரைகளினூடாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.